குறள் வெண்பா நூல்கள்

சோமேசர் முதுமொழி வெண்பா:

ஆசிரியர்: மாதவச் சிவஞான யோகிகள்

உரையாசிரியர்: வா. மகாதேவ முதலியார்

விலை ரூ. 3-00

முருகேசர் முதுநெறி வெண்பா:

ஆசிரியர்: சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள்

உரையாசிரியர்: கருப்பக்கிளர், சு. அ. இராமசாமிப் புலவர்

விலை ரூ. 2-50

இரங்கேச வெண்பா என்னும் நீதி சூடாமணி

ஆசிரியர்: பிறைசைச் சாந்தக் கவிராயர்

உரையாசிரியர்: சு. அ. இராமசாமிப் புலவர்

விலை ரூ. 3-00

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி-6 : : சென்னை-1,



குறள் வெண்பா நூல்-உ.

திருத்தொண்டர் வெண்பா

குமர பாரதியார்

முன்னுரை

தென்றமிழ் நாட்டுத் தனித் தமிழ்ப் பொது மறையாம் திருக்குறள் உலகப் பொதுமறையாகத் திகழ்கின்றது. அப்பொது மறையால் பெறப்படுவது தொல் தமிழர் கைக் கொண்டொழுகிவந்த செம்பொருட் செந்நெறியாகும். செம்பொருளெனினும் சிவன் எனினும் ஒன்றே. அம்முறை யான் நோக்கின் சிவனெறியாம் சித்தாந்த சைவமும் உலகப் பொது நெறியாகும்.

திருக்குறள் தமிழக ஒழுகலாற்றின் இலக்கணமாகும். அவ்விலக்கணத்திற்கு முற்றும் பொருந்திய இலக்கியமாகத் திகழ்வது திருத்தொண்டர்புராணம் எனப்படும் பெரிய புராணமாகும். பெரிய புராணம் ஒன்றே மொழிபெயர்ப் பில்லாத தமிழக ஒழுகலாற்று மெய்வரலாற்று நூலாகும். ஏனைய இதிகாச புராணங்களனைத்தும் மொழிபெயர்ப்பு நூல்களே. தமிழக மெய்வரலாற்றுக்கு மாறில்லாமல் அவை காணப்படாமை பலருமறிந்ததே.

பல நூல்கள் பிற்பாதி திருக்குறளுடன் காணப்படி னும், இந்நூல் போன்று தமிழக வரலாறுகளே முற்றும் நிரம்பியதாக அமையவில்லை. இந்நூலொன்றே அக்குறை யில்லாமல் திகழ்கின்றது. இது திருக்குறள் அதிகார முறைவைப்பைப் பின்பற்ருது, திருத்தொண்டர் புராண வைப்பு முறையினைப் பின்பற்றிச் செல்கின்றது. அதற் கியைந்த திருக்குறள்களைப் பிற்பாதியில் கொண்டு திகழ் கின்றது.

திருத்தொண்டத் தொகையின் திருப்பாட்டுக்கள் பதினொன்று. அப் பாட்டுக்களிற் காணப்படும் மெய்யடி

யார்கள் எழுபத்திருவர். எனவே எழுபத்திருவர்க்கும் வெண்பாக்கள் எஉ. அமைந்துள்ளன. திருத்தொண்டத் தொகை முறைப்படி பெரிய புராணம் சருக்கங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

முதற்கண் "திருமலைச் சருக்கம்." முடிவின்கண் "வெள்ளானைச் சருக்கம்" நடுவணதாகப் பதினொரு சருக்கம் ஆகப் பதின்மூன்று சருக்கமாகும். நம்பியாரூரர்க்குப் பத்துச் சருக்கத்தும் ஒவ்வொரு பாட்டுக் காணப்படுகின்றன. முடிவில் எட்டுப் பாட்டுக் கூடுதல். மேலும் அப்பருக்கு நான்கு பாட்டும், ஞானசம்பந்தர்க்கு நான்கு பாட்டும், கோச்செங்கட் சோழர்க்கு ஒன்றுமாக ஒன்பது பாட்டுக் கூடுதல் எஉ + கo + ச + ச + க + அ ஆகத் தொண்ணூற்றொன்பது பாடல்களுள்ளன.

இந்நூலாசிரியர் திருப்பெயர் "குமரபாரதியார்" என்ப. அவரைப்பற்றி வேறொன்றும் தெரியவில்லை. இந்நூல் பொதுவாகத் தமிழன்பர்களுக்கும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களுக்கும் பெரிதும் பயன்தரத்தக்க தொன்றாகும்.

ப. இராமநாதன்
கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர்.

உ

திருச்சிற்றம்பலம்

சாத்துகவி

——

இது

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடு துறையாதீனம்

திருவருட்டிரு சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள்

அருளிச் செய்தது

——

வெண்பா

திருத்தொண்டர் வெண்பா திசையனைத்து மோங்கத்
திருத்தியச் சிட்டான் றெளிவாப்—பொருத்தமுற
நற்றமிழ்தொல் காப்பியங்க ணண்ணு நயமனைத்துங்
கற்றதிரு நாவுக் கரசு.

——

உ

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் வெண்பா

விநாயகர் காப்பு

தூண்டா விளக்கருள்செய் தொண்டத் தொகையினம்பி
யாண்டாரந் தாதிமுறை யன்பானோர்க்—கீண்டியமெய்
வள்ளுவர்நூல் வெண்பா வகுத்துரைப்பம் நாரையூர்ப்
பிள்ளையா ரைத்தொழுது பின். (க)

அவையடக்கம்

மைவைத்த கண்டர் மறைவாக்கி னுற்புகழ்ந்த
சைவத் தலைவரன்பு சாற்றுதல்யான்—கைவைத்
தரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (உ)

வாழ்வித்தல்

தூயதிருத் தொண்டத் தொகைதந்து சுந்தரர்தா
மாயிருஞா லத்தோரை வாழ்வித்தா—ராயதெவன்
கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு. (ங)

நூல்

தில்லைவாழந்தணர்

பூவா யிரம்பேர் புகழ்கூத்த ரைத்தில்லை
மூவா யிரம்பேர் முதலெனக்கொண்—டோவார்
அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

திருநீலகண்டக்குயவநாயனர்

ஆலகண்ட ராணைகொண்டில் லாளெதிர்செல் லாதுதிரு
நீலகண்ட ரைம்பொறிமா நீக்கினர்—மேலாய்
உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 2

இயற்பகைநாயனர்

வயற்பகையுள் ளுள்ளுவப்ப மாதவர்க்கில் லாளை
யியற்பகையி கழ்ந்தெள்ளா திந்தார்—செயற்பால்
இகழ்ந்தெள்ளா திவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளு ளுவப்ப துடைத்து. 3

இளையான்குடிமாறநாயனர்

உய்வித் தரனடியார்க் கோரிருளிற் போய்மாறன்
செய்வித்தும் வாரியன்னஞ் செய்தாரே—மெய்வருந்தி
வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். 4

மெய்ப்பொருணயனர்

பொய்ப்பொருண்மாற் ருன்புரிந்த பொய்த்தவவே டம்பொருளாய்
மெய்ப்பொருளார் கண்ட விதந்தானே—மெய்ப்பொரு
ளெப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 5

விறன்மிண்டநாயனர்

அறன்மண்டு சுந்தரனை யாரூ ரரனை
விறன்மிண்டர் தாமே வெகுண்டார்—மறமன்
றுருஅ தவர்போற் சொலினுஞ் செருஅர்சொ
லொல்லை யுணரப் படும். 6

அமர்நீதிநாயனர்

நிரம்புபொருள் சேயொடமர் நீதிமனை யாளோ
டரன்கோ வணத்தட் டதனேர்—இருந்தார்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. 7

சுந்தரமூர்த்திநாயனார்

அளந்தருள்செம் பொன்மணிமுத் தாற்றிலிட் டாரூர்க்
குளந்தனிலே கண்டெடுத்துக் கொண்டா—ருளைந்து
பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. 8

எறிபத்தநாயனார்

பத்தர்பூ மூழி பறித்தகரி பாகரைக்கொன்
றித்தலவேங் தஞ்ச வெறிபத்தர்—கைத்தார்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. 9

ஏனாதிநாயனார்

தானாக வெல்லாதான் றன்னுதல்வி பூதியைக்கண்
டேனாதி நாத ரிகலிழந்தா—ரானதனால்
சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். 10

கண்ணப்பநாயனார்

புண்ணப்பர் கண்ணிலென்று புன்கணுறுப் பீர்ந்தப்பிக்
கண்ணப்ப ரன்புறுப்பிற் கைசெய்தார்—வண்ணப்
புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு. 11

குங்குலியக்கலயநாயனார்

தலையன்பி னால்வளைந்தார் தம்மைநிமிர்த் திட்டார்
கலையன்பின் காணிடுக்கண் காணார்—மலைவின்
மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
இடுக்க ணிடர்ப்பா டுடைத்து. 12

மானக்கஞ்சாறநாயனார்

பஞ்சவடிக் கென்றுசிவ பத்தர்க் குவப்பமண
அஞ்சுதைமென் கூந்தலரிந் தன்றிந்தார்—கஞ்சாறர்
ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 13

அரிவாட்டாயநாயனர்

போயகமர் மாவடுவும் புண்ணியர்வா யிற்கொளப்பெய்
தாயரகத் தூறுவடுத் தாங்கொண்டார்—வீயாரோ
சாதலி னின்னுத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை. 14

ஆனயநாயனர்

ஆனயர் வேயிசையி லஞ்செழுத்தை யஞ்செவிச்செந்
தேனு யரனுற்குச் செய்தனரே—கானிற்
பொருள்கருவி காலம் வினையிடனே டைந்தும்
இருடீர வெண்ணிச் செயல். 15

சுந்தரமூர்த்திநாயனர்

ஆதியிலா ரூரர்க் கமுதாக வேபரவை
வீதியெல்லா நெல்லாய் விளைந்ததே—நீதியால்
இல்லதெ னில்லவண் மாண்பானு லுள்ளதென்
இல்லவண் மாணக் கடை. 16

மூர்த்திநாயனர்

சேர்த்திமுழங் கையெலும்புந் தேய்வுறவே சந்தனமா
மூர்த்திமது ரேசருக்கு முன்பரைத்தார்—பார்த்தீரோ
அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. 17

முருகநாயனர்

மட்டார்தார் கண்ணி வகைசிவபூ சைக்கொருநாள்
முட்டாது செய்தார் முருகனர்—விட்டாரோ
வீழ்நாள் படாஅமை நன்ருற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். 18

உருத்திரபசுபதிநாயனர்

உருத்திரமே சொல்லி யுதகத்து ளேகின்
றுருத்ர பசுபதியா ருற்ருர்—திருத்தாள்
தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு. 19

திருநாளைப்போவார்நாயனுர்

மூவா யிரமறையோர் மொய்ப்பத் திருநாளைப்
போவார் சிதம்பரத்துட் போயடைந்தா—ரோவாப்
பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். 20

திருக்குறிப்புத்தொண்டநாயனுர்

தொண்டர் குறிப்பறிந்த தொண்டர் திருக்குறிப்புத்
தொண்டரைத்தங் கந்தைதந்து சோதியராட்—கொண்டார்
குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். 21

சண்டேசநாயனுர்

அறஞ்செயத் தாதைதா ளற்றிடச்சண் டேசர்
மறஞ்செயலே புண்ணியமாய் வாழ்ந்தார்—திறந்தெரியின்
நல்லவை யெல்லாஅந் தியவாந் தியவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. 22

சுந்தரமூர்த்திநாயனுர்

ஓராப் பரவைக் குமாபதியைத் தூதாக்கித்
தீராப் புலவியையுந் தீர்த்தாரே—யாரூரர்
உப்பமைந் தற்றுற் புலவி யதுசிறிது
மிக்கற்று னீள விடல். 23

திருநாவுக்கரசுநாயனுர்

தரைசேர் சமணிக்கிச் சைவஞ்சேர் நாவுக்
கரசர் வயிற்றுவலி யற்று—ரைசேர்ந்த
சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். 24

நீற்றறைநஞ் சானைகட னேருய்த்தா ரப்பருக்கு
மாற்றமணர் பின்னிருந்து வாழ்ந்தாரோ—ஆற்றரிய
நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 25

மருணீக்கி யார்தன்ம சேனருமாய் நாவுக்
கரசரப்ப ராகியின்ப மானு—ரருளால்
இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 26

விண்களிப்பர் காணு வியன்கயிலை வாழ்வையப்பர்
கண்களிப்ப ஐயாற்றிற் கண்டுவந்தா—ரெண்களிப்பக்
கண்ணுடைய ரென்பவர் கற்ரேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 27

மாமணிப்பொன் மாதரெதிர் வந்துறினும் பற்ருமல்
தாமரன்பா லன்பரசர் தாழ்ந்தாரோ—ஆமெனவே
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும். 28

குலச்சிறைநாயனர்

நலச்சிறைநீர் வேணியார் நல்லடியா ராகுங்
குலச்சிறையார் தாம்பணிதல் குன்ரு—ரிலக்கிழார்
எல்லார்க்கு நன்ரும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந்தகைத்து. 29

பெருமிழலைக்குறும்பநாயனர்

நாவலர்கோ மான்கயிலை நாளைப்போ மென்றுமுன்போய்
மேவிமிழ லைக்குறும்பர் வீற்றிருந்தார்—யாவருக்கும்
இன்னு தினனில்லூர் வாழ்த லதனினும்
இன்னு தினியார்ப் பிரிவு. 30

காரைக்காலம்மையார்

என்புருவா லம்மையெள்ள வீசரெமக் கம்மையென்னும்
அன்புருவாள் காரைக்கா லம்மைகாண்—முன்பே
உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து. 31

அப்பூதிநாயனர்

அரசினையப் பூதி யடிகளறி வாரோ
வுரைசெயுணர் வானுநட் புற்ருர்—மருவிப்
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். 32

திருநீலநக்கநாயனுர்.

நலங்கொடிரு நீலநக்கர் நாதர்மே லில்லாள்
சிலம்பிவிழ வாய்மருந்து செய்தாள்—சலங்கொளுமுன்
நோய்நாடி நோய்முத ஞடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 33

நமிநந்தியடிகனுயனுர்

நக்கமணர் வெள்க நமிநந்தி யாரூர்க்கு
மிக்கபுன லாலே விளக்கெரித்தார்—தக்கமனத்
தெண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 34

சுந்தரமூர்த்திநாயனுர்

ஆருரு காட்டாரை யாறணேயா லாறுபெருக்
காருரு காட்டவடைந் தாரூரர்—பேருனர்
வெள்ளத் தனேய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். 35

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்

வால வயதில் வளர்புகலிப் பிள்ளையார்
போல விசயம் புரிந்தவரார்—ஞாலமிசை
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் ருேன்ருமை நன்று. 36

பண்ணுர் பசுந்தமிழ்ச்சம் பந்தரெதிர் வந்தமணர்
எண்ணு யிரர்கழுவி லேறிஞ—ரொண்ணுது
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. 37

முத்தமிழ்ஞா னத்தலைவர் முன்னம் பகைசாரிப்
புத்தனெதிர் நின்றிடியிற் பொன்றிஞ—னித்திறமென்
கூற்றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க்
காற்ருதா ரின்ணு செயல். 38

ஏறியவோ டக்கோ லிசைஞானச் செந்தமிழால்
ஆறுகடந் தார்தோணி யார்மகனார்—வீறடங்கா
வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு. 39

கணவனெனக் காதலியைக் காழியர்கைப் பற்றி
மணவரையீ சன்கழலாய் வாழ்ந்தார்--குணமே
தலைப்பட்டார் திரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 40

ஏயர்கோன்கலிக்காமநாயனார்

ஈசனையாள் வாராம்வந் தென்னையாள் வாரென்று
காசினியில் மாண்டார் கலிக்காமர்—பேசின்
மருந்தோமற் றாரேனும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. 41

திருமூலநாயனார்

பரகாயஞ் சேர்ந்தார் பசுக்களா லாட்சி
மருவாமை மாதவமே வாழ்ந்தார்—திருமூலர்
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். 42

தண்டியடிகணாயனார்

அந்தகனென் றேசு மமணர்தங் கண்ணழியத்
தந்தமொழி சாதித்தார் தண்டியார்—முந்தமொழி
சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். 43

மூர்க்கநாயனார்

உருளாய மும்பொன் னுதவுதல்மூர்க் கர்க்கே
பொருளாய மற்றவர்க்கே போக்கும்—அருளாம்
அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. 44

சோமாசிமாறநாயனார்

சோமாசி மாறனுர் சுந்தரரால் யாகமினித்
தாமா றரனை யழைப்பித்தா—ராமாம்
பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 45

சுந்தரமூர்த்திநாயனார்

பொருட்டுறையன் பாட்டேநற் பூசையென்ரு ரூரற்
கருட்டுறையா ரன்புசெய்வா ராஞர்—மருட்டோ
செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். 46

சாக்கியநாயனார்

அங்கசன்பூ வெல்லா மடுகணையே சாக்கியர்கைச்
செங்கலெலாஞ் சங்கரற்குத் தேமலரே—செங்கேழ்
கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். 47

சிறப்புலிநாயனார்

எய்தமகிழ்ந் தின்சொலுரைத் தீசனடி யார்க்கிதமே
செய்தனஞ்செய் தாரே சிறப்புலியார்—வெய்யதுரூர்
மோப்பக் குழையு மனிச்ச மூகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 48

சிறுத்தொண்டநாயனார்

காய்க்கறிவே ஞென்றுதொடாக் கள்ள வயிரவர்க்கோர்
சேய்க்கறிசெய் திட்டார் சிறுத்தொண்டர்—வாய்க்கினிதாய்
இன்னு திரக்கப் படுத லிரந்தவர்
இன்முகங் காணு மளவு. 49

கழறிற்றறிவார்நாயனார்

நெறிவார் சடையரைப்போ னிணிலத்தோர் செய்கை
யறிவார் கழறிற் றறிவா—ரறிவாரார்
எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் ரெழில். 50

கணநாத நாயனர்

நாட்டிலடி யாரையெல்லா நாதன் பணிவிடையே
காட்டிவாழ் வித்தார் கணநாதர்—வேட்டவர்தாஞ்
செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. 51

கூற்றுவநாயனர்

ஆற்றரிதா மீச னடிமுடியா கப்புனைந்து
போற்றி மனக்கவலை போக்கினர்—கூற்றர்
தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. 52

சுந்தரமூர்த்திநாயனர்

ஆரூர ரிசரைத்தா தாக்கியநாட் கூன்குருடு
தாரோடு தாம்பூலந் தாங்கவினை—தீர்வார்
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 53

பொய்யடிமையில்லாத புலவர்

மதுரையிலே மேழ்புலவர் வல்லசிவன் பாத
மதுபொருளாப் பாவியற்றி னரே—புதுமையோ
கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ரு டொழாஅ ரெனின். 54

புகழ்ச்சோழநாயனர்

தங்களத்தில் வீழ்ந்த சடைத்தலைகண் டஞ்சியஞ்சிப்
பொங்கழற்குள் வீழ்ந்தார் புகழ்ச்சோழர்—தங்கருமந்
தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். 55

நரசிங்கமுனையரையநாயனர்

மூரிநர சிங்க முனையரையர் மாதவருட்
சீரியதூர்த் தற்கிரட்டி செய்தாராம்—பூரியினை
அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 56

அதிபத்தநாயனுர்

மீனுர்செல் வங்கெடினு மீன்வலையிற் சிக்கொருமீன்
ஆனுலு மீந்தா ரதிபத்த—ரானு
திடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். 57

கலிக்கம்பநாயனுர்

மெய்யடியா ராயுமடி மேற்பெயுநீர் பிந்தவாள்
கைதடியுங் கூர்ந்தார் கலிக்கம்பர்—மையலைக்கொண்
டில்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல். 58

கலியநாயனுர்

எள்ளாவி ளக்கரன்பா லேற்றக் கலியரில்லாள்
கொள்ளாரே யேதுங் கொடாருலகி—னுள்ளார்தா
நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு. 59

சத்திநாயனுர்

அண்ணலடி யாரையிகழ்ந் தாழ்நரகி லாழாமே
தண்ணளியா னுவரிந்தார் சத்தியா—ரெண்ணமுற
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 60

ஐயடிகள்காடவர்கோனுயனுர்

நாடதனி லேதலங்க ணண்ணிநல் வெண்பாவால்
ஆடலர னைத்துதித்தா ரையடிகள்—காடவர்கோன்
தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 61

சுந்தரமூர்த்திநாயனுர்

சேரர்கோ னிதித் திரவியங்கள் சுந்தரர்பாற்
சோரர் கவர்ந்தொளித்துஞ் சோர்வுண்டோ—பார்க்கில்
அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை. 62

கணம்புல்லநாயனர்

கணம்புல்லர் நெய்வாங்கக் காணுர் கணம்புல்
இணங்குதலை நெய்விளக்கென் றிட்டார்—வணங்கரன்பால்
துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 63

காரிநாயனர்

பாரின்மூ வேந்தர் பரிசுவப்பப் பாப்பாடிக்
காரியா ராலயங்கள் கட்டினு—ரோரிடமோ
யாதானு நாடாமா லாராமா லென்னெருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. 64

நின்றசீர்நெடுமாறநாயனர்

பழுதறுசம் பந்தரெதிர் பாழ்சமணர் தாழ
வழுவறுநெல் வேலிவென்ற மாறர்—கழுவிட்டார்
அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். 65

வாயிலார்நாயனர்

ஆயறிவு தீப மகமல ரன்பமிர்தங்
கோயின்மன மாகவென்றுங் கொண்டிருந்தார்—வாயிலார்
ஓர்த்துள்ள முள்ள துணரி னெருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. 66

முனையடுவார்நாயனர்

வினையடுவார் வந்தடுக்க வென்றுகொண்ட கூலி
தனையடுவார் சைவர் தமக்கே—முனையடுவார்
தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 67

சுந்தரமூர்த்திநாயனர்

தென்புகலூ ரீசரையுஞ் சென்றுபணிந் தாரூரர்
பொன்புகலாப் பெற்ருர் புகழ்பெற்ரு—ரின்புற்ருர்
ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு. 68

கழற்சிங்கநாயனர்

தொழச்சங்க ரன்சூடாத் தூமலர்மோந் தாள்கை
விழச்சென் றெறிந்து விடுத்தார்—கழற்சிங்கர்
ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்தி யார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. 69

இடங்கழிநாயனர்

நடங்கழியா ரன்பருக்கே நற்பொருள்க ளெல்லாம்
இடங்கழியா ரன்பினெடுத் தீந்தார்—முடங்கா
அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. 70

செருத்துணைநாயனர்

கருத்தனணி பூவைக் கழற்சிங்கன் றேவி
யருத்தியின்மோந் தாண்மூக் கரிந்தார்—செருத்துணையார்
வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
னுண்ணவை யஞ்சு பவர்க்கு. 71

புகழ்த்துணைநாயனர்

வற்கடம்வந் தாண்போய்மெய் வாடிப் புகழ்த்துணைக்கை
நற்கலசம் வீழவர னூர்கொடுத்தார்—பொற்காசு
தெய்வத்தா னுகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 72

கோட்புலிநாயனர்

பொலிகுழவி கோட்புலியார் கொன்றூர் விரையாக்
கலிகடந்த குற்றங் கடிந்தா—ருலகில்
குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். 73

சுந்தரமூர்த்திநாயனர்

மாவணங்கைக் கொண்டிடுமுன் வந்தரனூர் சுந்தரர்க்கோர்
ஆவணங்கைக் கொண்டுமறித் தாட்கொண்டார்—நோவ
அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். 74

பத்தராய்ப்பணிவார்

வாய்ப்பவர ஊனத்தொழுது வாய்குழறிக் கண்ணருவி
தோய்ப்ப வுடனடுங்கித் தொல்பத்த—ராய்ப்பணிவார்
அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. 75

பரமனையேபாடுவார்

பரமனையே பாடுவார் பாடும் புகழால்
இருவினையுஞ் சேரா ரிவரே—மருளாம்
இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 76

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்.

அத்தனடி யல்லா லறம்பொருளின் பங்களிலே
சித்தமலை யார்சித்தத் தைச்சிவன்பால்—வைத்தார்தாம்
பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 77

திருவாரூர்ப்பிறந்தார்

மன்னுதிரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார்
உன்னு சிவகணத்தி னுற்றுயர்ந்தா—ரின்னே
நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 78

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்

கருமேனி யன்பாற் கழீஇமுப் போதுந்
திருமேனி தீண்டுவார் சீர்வாழ்—வொருவார்
பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 79

முழுநீறுபூசியமுனிவர்

அழுதி சனைநினைந்தே யஞ்சுபதஞ் சொல்லி
முழுநீ றணிவர்நித முட்டார்—பழுதறினும்
ஒல்லும் வகையா லறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். 80

அப்பாலுமடிசார்ந்தார்

பாடுமுனைப் பாடியர்கோன் பாடலின்மெய்ப் பாடங்கொண்
டாடுவரப் பாலு மடிசார்ந்தா—ராடரன்பாற்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. 81

சுந்தரமூர்த்திநாயனர்

பித்தரென்று வைதாற் பிழைபொறுத்தல் மாத்திரமோ
வைத்தாரா ரூரற் கருள்புரிந்தார்—நித்தம்
அழிவந்த செய்யினு மன்பரூ ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். 82

பூசலார்நாயனர்

வானளா வுங்கோயின் மன்னரற்குத் தன்மனமே
தானமாப் பூசலார் தாபித்தார்—ஞான
மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 83

மங்கையர்க்கரசியார்

ஞானசம் பந்தரங்கே நண்ணியதா லெண்ணமிலா
தானிவிளைத் தாரே யமணர்க்கு—மானியார்
கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 84

நேசநாயனர்

ஈசருடை மெய்யடியார்க் கேதேனுஞ் செய்வலென்று
நேசருடை கோவணங்கீள் நெய்தளித்தா—ராசைபுரிந்
தன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்ருத் துணை. 85

கோச்செங்கட்சோழநாயனர்

முந்திகலாற் செங்கணுர் மூண்டானைக் காவினும்பின்
தந்திபுகா வாயில் சமைத்தாரே—யெந்தைக்
குடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. 86

சிலம்பியா னூற்கோயில் செய்தசெங்க ணூர்பின்
தலங்கடொறுங் கோயில்சமைத் தாரே—நலங்கூர்
தவமும் தவமுடையார்க் காகு மவமதனை
அஃதிலார் மேற்கொள் வது. 87

திருநீலகண்டயாழ்ப்பாணர்

கானத் திருநீல கண்டயாழ்ப் பாணரைப்போல்
ஞானத் தலைவருக்கு நட்பினரார்—மானத்து
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. 88

சடையநாயனர்

ஆம்பற்றி னூற்சடைய ராலால சுந்தரரைத்
தாம்பெற்ற பேறு தவப்பேறே—ஓம்பிற்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 89

இசைஞானியார்

உற்றவிசை ஞானியா ரோங்குபுகழ்ச் சுந்தரரைப்
பெற்றதினு மன்புமிகப் பெற்றாரே—முற்றறிவால்
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். 90

சுந்தரமூர்த்திநாயனர்

கனிந்திதையங் கண்டார் கமலினியுங் காவில்
அனிந்திதையுஞ் சுந்தரர்கண் டாங்கே—புனைந்துரைத்தென்
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில. 91

சுந்தரரைக் கண்டலர்கொய் தோகையர்சென் றொருநா
ளெந்தைகயி லைக்கலரா யின்றளவும்—வந்ததே
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. 92

அங்கருளா லாரூர ராசையுற வேபரவை
சங்கிலியார் மானேய் தணிவித்தா—ரெங்கோன்
பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து. 93

சீரூர் கயிலையினுஞ் செல்லுநாள் வில்லவனை
ஆரூரர் சிந்தித் தழைத்தகன்று—ரோரூர்
முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. 94

தள்ளாது சேரரொடு தாங்கயிலைக் காரூரர்
வெள்ளானை மேற்சென்றூர் விண்ணூரு—யுள்ளமிசை
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 95

நாவலர்வெள் ளானை நடத்தவுப மன்னியர்போல்
ஆவலுடன் கண்டுபணிந் தார்களோ—தேவர்
பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து. 96

பாலாழி யுண்ட பழமுனிசொன் னுன்முனிவர்க்
காலால சுந்தரர்சொல் லங்கினிதாய்—மேலாம்
பணிவுடைய னின்சொல னுதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற. 97

தம்முடைய தோழர்வரத் தம்முடைய தோழரையும்
வம்மினென வெண்கயிலை வாழ்வித்தா—னெம்மிறைவன்
நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை. 98

சொல்வைத்த சொல்லாரச் சொல்லக் கயிலையரன்
செல்வத் திருச்சவியிற் சேர்ந்ததே—மல்வைத்த
செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. 99

திருத்தொண்டர்வெண்பா

முற்றிற்று.

திருத்தொண்டர் புகழ்மாலை

காப்பு

சீரார்நற் சைவத் திருத்தொண்ட ரைத்துதிக்க
நாரார்வி நாயகனை நாடு.

தில்லைமறை யோர்க டிருநீல கண்டரில்லாள்
இல்லையெனு தீந்தா ரிளையான்றன்—றெல்குடியார்
மெய்ப்பொருள்வி றன்மிண்டர் மேவுமமர் நீதியார்
மெய்ப்பதங்கொண் டேத்திமகிழ் மின். 1

எறிபத்த ரேனாதி யெய்தியகண் ணப்பர்
செறிகலையர் மானக்கஞ் சாற—ரறிஞரரி
வாட்டாய ரானயர் மன்னுமலர்ப் பாதமதை
வேட்டவர்தா ளென்றனுச்சி மேல். 2

மூர்த்திமுரு கர்ருத்ர மொய்ப்பசுப திச்செல்வர்
சீர்த்திமிகு தெய்வச் சிதம்பரத்தி—லார்த்த
திருநாளைப் போவார் திருக்குறிப்புத் தொண்டர்
திருநாளைக் கொண்டாடிச் சேர். 3

அப்பர் குலச்சிறையா ராயமிழ லைக்குறும்பர்
அப்பூதி காரைக்கா லம்மையார்—செப்பரிய
நன்னீல நக்கர் நமிநந்தி யார்கழற்கீழ்
உன்னுமன மெந்நேர மும். 4

வம்பமணர் வல்வழக்கை வாதிலற வேயொழித்த
சம்பந்த ரேயர்கோன் சார்மூலர்—நம்பியசீர்
தொன்மைதண்டி மூர்க்கருடன் சோமாசி மாறனர்
நன்மைதரும் பொற்கழலை நாடு. 5

சாக்கியர்சி றப்புலியார் தக்கசிறுத் தொண்டருயிர்
காக்குங் கழறிற் றறிவார்கண்—ணேக்கமிகு
நாதன் பணிவிடையே நாடுங் கணநாதர்
பாதபங்க யத்தையே பாடு. 6

பொய்யடிமை யில்லாப் புலவர் புகழ்ச்சோழர்
தெய்வநர சிங்கரதி பத்தரொடு—செய்யமகிழ்
வார்கலிக்கம் பர்கலிய ரையடிகள் காடவர்கோன்
பேர்கமழச் செப்புவதென் பேறு. 7

கணம்புல்லர் காரிநின்ற சீர்நெடுமா றன்பால்
வணம்புல்லு மீசனருள் வாயிலார்—மணம்வாழ்
முனையடுவார் பொன்னனையார் மொய்குழலார் நேசர்
தனையடுவார் தாண்மறவேன் சார்ந்து. 8

எந்தைகழற் சிங்க ரிடங்கழிசெ ருத்துணையார்
புந்திமகிழ் வெய்தும் புகழ்த்துணையார்—சிந்தையுறக்
குற்றங் கடிந்ததொரு கோட்புலியார் பொற்பாதம்
பெற்றவரை நற்றுணையாப் பேண். 9

நார்பத்த ராய்ப்பணிவார் நற்பரம னைப்பாடு
வார்சிவன்பாற் சித்தத்தை வைத்தாரா—ரூர்ப்பிறந்தார்
முப்போது மேனிதொடு வோர்முழுநீ றிட்டிடுவோர்
அப்பா லடிசார்ந்தார்க் காள். 10

பூசலார் பூவை யருக்கரசி செங்கணர்
நேசர்திரு நீலகண்ட யாழ்ப்பாணர்—வாசச்
சடையரிசை ஞானியார் சற்குருவா ரூரர்
இடைவைப்பா யன்பினை யே. 11

திருத்தொண்டர் புகழ்மாலை

முற்றிற்று.

பொழிப்புரை

விநாயகர்—காப்பு

தூண்டா விளக்கு - மங்காது எப்பொழுதும் சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கும் விளக்கு. தொண்டத்தொகை - நம்பியாரூரர் பாடியருளிய திருத்தொண்டத் தொகை. நம்பியாண்டார் நம்பி - திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளை யாரருள்பெற்ற பெரியார்.

அவையடக்கம்

மைவைத்த கண்டர் - திருநீலகண்டமுடைய சிவ பெருமான்.

உபசாரம்

சுந்தரர் - நம்பியாரூரர். இவர் திருத்தொண்டத் தொகை என்னும் மாபெரும் தென்றமிழ்நாட்டுத் திருத் தொண்டர் திருவரலாறு திருவாய் மலர்ந்தருளியவர். இந் நூல் தமிழகத்தின் மெய்வரலாறுமாகும்.

நூல்

1 பூ - நிலவுலகம். ஆயிரம் பேர் - அளவில்லா தவர் கூத்தர் - அம்பலவாணர். தில்லை மூவாயிரவர் - தில்லை வாழந்தணர். இவர்கள் கூத்தப் பெருமானை விழுமிய முழு முதல்வரெனக் கொண்டு வழிபாடு புரிந்துவந்த செந்நெறிச் செல்வர்.

2 ஆலகண்டராணை - திருநீலகண்டம் என வகுத் துரைத்த ஆணை. தில்லைத் திருநீலகண்டக் குயவனுரை நன் னெறி நிறுத்தற் பொருட்டு அவர் தம் கற்புறு மனைவியார் கூறியவாணை. இதனுல் அவர் பொறிபுலனடக்கிய புண்ணிய ரானுர்.

3 மாதவர் - பெரிய சிவக்கோலம் கொண்டு எழுந்தருளி வந்த பெருந்தவத்தோர். இத் திருவரலாற்றில் மகளிரின் அருங்கலமாங் கற்பினைக் காக்கும் பொற்பு கணவன் மனைவி

ஆகிய இருவர்தம் பெருங் குலத்தாரையுஞ் சார்ந்திருக்கும் உண்மை புலப்படுதல் காணலாம். அதன்பொருட்டுத் தம்முடைய அரிய உயிரையும் விட்டனர்.

4 உய்வித்து - விதைத்த விதை. நென்முளை வாரி இன்னமுதருந்திய நீர்மையர். மாறன் - இளையான்குடி மாற நாயனார்.

5 முத்தநாதன் செய்த வஞ்சனையால் உயிர் நீத்தவர் மெய்ப்பொருள் நாயனார். அவர் திருவேடமே மெய்யெனக் கொண்டமையான் சிவனடி யெய்தினர்.

6 அறன்மண்டு - மிக்க அறம் பொருந்திய. சுந்தரன் - நம்பியாரூரன். ஆரூரான் - திருவாரூர்ப் பெருமான். விறன் மிண்டர் நம்பியாரூரரையும், திருவாரூர்ப் பெருமானையும் புறகென்றனர். புறகு - விலக்கு. இதனால் சிவனருளால் திருத்தொண்டத் தொகையினை நம்பியாரூரர் பாடியருளினர்.

7 சிவபெருமான் தவத்தோராக வந்து அமர்நீதியார் பாற்கோவணங்கொடுத்து மறைத்தனர்; குளித்து வந்தனர். கோவண எடைக்கு ஈடாகப் பெரும் பொருளோடு தாமும், மனைவியும், குழந்தையும் துலையிலேறி வீடுபெற்றனர். நிரம்பு பொருள் - பெரும் பொருள்.

8 மணிமுத்தாறு—பழமலை யெனப்படும் விருத்தாசலத்தோடும் பேராறு. சிவன் அருளிய பன்னீராயிரம் பொன்னையும் அவன் அருளியவண்ணம் மணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்திலெடுத்தனர் நம்பியாரூரர்.

9 மூழி - பூக்குடலை. கைத்தார் - செய்தனர். சிவகாமியாண்டார்தம் பூக்குடலையைப் பறித்துச் சிந்தியது புகழ்ச் சோழ நாயனார்தம் பட்டத்து யானை. அக் குற்றத்திற்காக எறிபத்த நாயனார் தம் கையில் தாங்கிய மழுவினால் அவ்வி யானையையும் பாகர் ஐவரையும் கொன்றனர். அரசன் உண்மையுணர்ந்து தன்னையும் கொல்லவேண்டுமென்று வேண்டினன். திருவருளால் யானையும் பாகரும் எழுந்தனர்; குடலையில் பூவும் நிறைந்தது. எறிபத்தர் வேண்டுகோளின்படி அரசன் யானைமேல் அரண்மனை புகுந்தனன்.

10 நுதல்-நெற்றி. ஏனாதிநாதரொடு பொருதுதோற்ற அதிசூரன் வஞ்சனையால் திருவெண்ணீறணிந்து வந்து வெல்ல முயன்றனன். திருநீற்றினைக் கண்ட ஏனாதிநாதர் தம்மைக்கொல்ல இடங்கொடுத்துச் சிவனடி யெய்தினர்.

11 அப்பர் - திருக்காளத்தியப்பர். காளத்தியப்பர் திருக்கண்ணினின்று குருதிவடியக் கண்டு, கண்ணப்பர் தன் கண்ணை இடந்தப்பிப் பேறு பெற்றனர்.

12 வளைந்தார் - திருப்பனந்தாளில் தாமாக வளைந்திருந்த சிவலிங்கப்பெருமான். அவ்வளைவினைக் குங்குலியக்கலய நாயனர், தங்கழுத்திற் கயிறு பூட்டி நிமிர்ந்திருக்கச் செய்தனர்.

13 பஞ்சவடி - மயிர்ப் பூணூல். மணவஞ்சுதை - மண நிகழ்ச்சியிற் காணப்பட்ட அமிழ்தொத்த மணப்பெண், மானக்கஞ்சாற நாயனர் மாவிரதியர் கட்டளைப்படி தன் ஒரு மகள் கூந்தலை மணநேரத்தில் அடியொட்ட அரிந்து கொடுத்துப் பேறுபெற்றனர்.

14 கமர் - நிலவெடிப்பு. புண்ணியர் - சிவபெருமான். அடிவாட்டாய நாயனர் சிவபெருமானுக்குத் திருவமுதாட்டக்கொண்டு, சென்ற மாவடு, செந்நெல்லரிசி, செங்கீரை முதலியன, கமரில் சிந்தின. அதனைக் கண்டு அவர் தம் ஊட்டியை அறுக்கத் தொடங்கினர். சிவபெருமான் கமரினின்றுந் தோன்றினர். மாவடு சடிப்பதால் உண்டாகும் விடேல் விடேல் என்னும் ஓசை காட்டினர். நாயனர் கையையும் பிடித்தருளினர். காட்சி கொடுத்து மனைவியாரோடும் சிவவுலகத்திலிருக்குமாறு அருளினர்-

15 ஆனயர் - பசுவினுக்குரியார். வேய் - மூங்கில். அஞ்செழுத்து - தனித் தமிழ்த் திருவைந்தெழுத்து. இது "சிவயநம" எனப்படும். பொருளமை மந்திரமாகும். அப்பொருள் வருமாறு :

சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு எனப்படும் ஐம்பெரும் மறைகளைத் தன்னகத் தடக்கியதே 'சிவயநம" இதுவும் மந்திரமாதலின் சிவாயநம என வ்ழங்கப்படும், அம் முறையில் 'வ' என்பது 'வா' என நீண்டும், 'யா' என்பது 'ய' என குறுகியும் வழங்கப்படுகின்றன.

பொருள் - மெய்ப்பொருளாகிய சிறப்பு மிக்க சிவம். கருவி - திருவடியிற் கூட்டுவிக்கும் வனப்பாற்றல். காலம் - காலம் போன்று சார்ந்து நிற்கும் தன்மையுடைய ஆருயிரின் அடையாளமாகிய யாப்பு. வினை - ஆருயிர்களை உடம்புடன் கூட்டி உலகியலில் நடத்திச் செல்லும் நடப்பாற்றல். இடன் - மாயை, கன்மம், மலம்: ஆகிய மூன்றனையும் குறிக்கும் மறைப்பு.

ஆனாய நாயனார் தூய சுடர்த் திரு நீறு விரும்பு தொழும் புள்ளார், வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப் பாலில், பேயுடனாடு "பிரானடி அல்லது பேணாதார்" எனச் சிறப்பிக்கும் பெற்றியர். ஆனாயர் குழலோசை மிக்க இனிமையுடையது. இனிமையே வடிவாகிய சிவபெருமானை முதன்மையாகக் கொண்டிருப்பதாலும் அவன்றன் பொருண்மறையாம் திருவைந்தெழுத்தை உள்ளுறையாகக் கொண்டு திகழ்வதாலும் அனைத்துயிரையும் இன்புறுத்தும் அருமை நிறைந்தமையாலும் மிக்க இனிமையுடைய தாயிற்று. ஆனாய நாயனார் சிவனருகிருக்கும் திருப்பெற்ற னர். இதனால் முல்லை நிலத் தெய்வமென வழங்கப்படும் "மாயோன். திருமால்" முதலிய திருப்பெயர்கள் விழுமிய முழுமுதல்வனும் ஒப்பில் ஒருவன்றன் திருக்கோலத் திருப் பெயர்களே என்னும் மெய்ம்மை விளங்கும். ஆவூர்வோன் கண்ணுதலோன் ஆமேய்ப்போன் கண்ணனும், யாவர் முதல்வரென எண்.

16 ஆரூரர் - நம்பியாரூரர்; வன்றொண்டர்; ஆலால சுந்தரர். அமுதம் - சிறந்த உணவு. குண்டையூர்க் கிழவர் என்னும் விழுமிய வேளாண் முதல்வர் நம்பியாரூரர்க்குத் திருவமுதாகத் திருவாரூர்ப் பரவை நாய்ச்சியார் மாளி கைக்கு நாளும் படி சமைத்துவந்தனர். முட்டுவந்த இடத்து, இறைவன்பால் வேண்டினர். இறைவன் நென்மலையை நல்கியருளினர். அதனைக் குண்டையூர்க் கிழவர் நம்பியா ரூரர்க்கு விண்ணப்பித்துக்கொண்டனர். நம்பியாரூரர் இறைவனை வேண்டினர். இறைவனுடைய பூதகணங்கள் அந்நெல் முழுவதையும் திருவாரூர்த் தெருக்கள் முற்று நிறைத்தன. பரவை நாய்ச்சியார் அவரவர் வீட்டு முன் னுள்ள நெல்லை அவரவரே எடுத்துக்கொள்ளலாமென்று பறையறைவித்தனர். அங்ஙனமே யாவரும் எடுத்து இன் புற்று வாழ்ந்தனர்.

17 மூர்த்தி நாயனார் திரு மதுரைக்குரியர். வணிகர் குலத்தைச் சார்ந்தவர். சிவபெருமான் திருக்கோவிலுக்குச் சந்தனக்காப்பு அரைத்து நல்கிவந்தனர். அந்நாளில் மதுரைமாநகரை யாண்ட மன்னன் வடுகக்கரு நாடன். அவன் சமண சமயத்தைச் சார்ந்தவன். நாயனாருக்குச் சந்தனக் கட்டை கொடுக்கக் கூடாதென்று தடை விதித் தனன். நாயனார் தன் முழங்கையை எலும்பு தேய நரம்பு தெறிக்க, குருதி வடிய அரைத்தனர். சிவபெருமான் அரு ளால் கை முன்போலாயது. அரசும் அவர்க்கே வந்தது.

சடைமுடி, வெண்ணீறு, சிவமணி மூன்றும் பூண்டு உலகாண்டனர். சிவன் திருவடியைச் சேர்ந்தனர்.

18 மட்டு - தேன். ஆர் - நிறைந்த, முட்டாது - தடை ஏற்படாது. முருகநாயனர் பூம்புகலூர்க்குரியவர். மறையவர் குலத்தைச் சேர்ந்தவர். சிவபெருமானுக்குப் பலவகையாகப் பூத்தொடுத்துக் காலந்தவிராது சாத்தி வழிபடுந் திருத் தொண்டினர். சம்பந்தர் அப்பர் ஆகிய இருவருக்கும் நண்பினர். புகலிப் பிள்ளையார் திருமணம் சேவித்துச் சிவனடி நீழலெய்தினர்.

19 உருத்திரம் - சிவபெருமானின் அழித்தற் கோலத் திருவுருவின் மந்திரம். உதகம் - தண்ணீர். இம் மந்திர செபத்தைக் கழுத்தளவு தண்ணீரில் நின்று செபித்துச் சிவனருளெய்தினர். இவர் தம் திருவூர் திருத்தலையூர். வேதியர் குலத்தைக் சார்ந்தவர்.

20 திருநாளைப் போவார் ஆதனூரில் தோன்றியவர். திருப்புன்கூர்ச் சிவன் திருக்கோவிலில் திருத்தொண்டு புரிந்தவர். சிதம்பரத்தை அடைந்தவர். அம்பலவாணர் திருவாணைப்படி தில்லையந்தணர் அமைத்த தீயின் மூழ்கிப் "புண்ணிய மாமுனி வடிவாய்" எழுந்தனர். அம்பலவாணர் அடிநிழல் எய்தினர்.

21 திருக்குறிப்புத் தொண்டர் என்பது காரணப் பெயர். திருத்தொண்டர் கந்தையினை ஒலித்துக்கொடுக்கும் திருத்தொண்டினர். சிவபெருமான் அடியவர் கோலத்துடன் வந்தனர். அவர் கந்தையினையும் வாங்கி ஒலித்துக்கொடுக்க முற்பட்டனர். விடாமழையாக நேர்ந்தது. சொன்னபடி நிறைவேற்ற முடியவில்லையே என்று வருந்தினர். கந்தை புடைக்கும் பாறையில் தலையை மோதலுற்றனர். சிவ பெருமான் காட்சியருளினர். அவரருளால் சிவவுலகம் எய்தினர்.

22 சண்டேசுரர் - நிலைப்பெயர். இந்நாயனர் திருவூர் சேய்ஞலூர். குலம் மறையோர் குலம். திருப்பெயர் விசாரசருமனர், தந்தை பெயர் எச்சதத்தன். தாயார் பெயர் பவித்திரையார். பருவம் படிக்கும் பருவம். ஆமேய்ப்போன் ஒரு புனிற்று கொம்புகொண்டு முட்டப்போயிற்று. அவன் பசுவின் உயர்வறியாததால் அடித்தனன். அதனைக் கண்டு சண்டேசுரர். அவனை விலக்கித் தாமே மேய்த்தனர். பால் மிகுதியும் சுரந்தது. அதனைக் கண்ட சண்டேசுரர் - முன் தொடர்பினுல் சிவபூசை தொடங்கினர். ஊரந்தணர்

எச்சதத்தனிடம் குறையுரைத்தனர். எச்சதத்தன் சென்று பாற்குடத்தைக் காலால் இடறினன். தந்தை தாளற வீசினர். வீசியகோல் மழுவாய் மாறிச் செயல் புரிந்தது. சிவபெருமான்காட்சியருளிச் சண்டேசுரர் பதவியளித்தனர். வேதியர் வேத வேள்வியே பெரிதெனக் கொள்பவர். சிவாகம வழிபாட்டினைச் சிறப்பாகக் கொள்ளாதவர். அதனாலேயே எச்சதத்தன் என்பவன் சிவபூசைக் கமைத்த ஆன்பாலைச் சிறிதும் அஞ்சாது காலாலிடறினன்.

23 நம்பியாரூரர் திருவொற்றியூரில் சங்கிலி நாய்ச்சியாரை மணந்தது காரணமாகத் திருவாரூர்ப் பரவை நாய்ச்சியார் ஊடினர். நம்பியாரூரர் வேண்டுகோளின்படி சிவபெருமான் ஒரு காலுக்கு இரு காலாகத் தூதுசென்று பரவையார் புலவியை அகற்றினர். நம்பியாரூரரும் பரவையாரில்லம் சென்றனர். பரவையார் வாயிலில் வந்து நின்று எதிர் ஏற்றனர். வணங்கினர். நம்பியாரூரர் பரவையார் ''தண் தளிர்ச் செங்கை பற்றிக்கொண்டு மாளிகையுட் சார்ந்தார்.''

24 மருணீக்கியார்-திருநாவுக்கரசு நாயனாரின் பிள்ளைத் திருப்பெயர். தன்மசேனர் - சமணக் குருமார் கொடுத்த பட்டப் பெயர். திருநாவுக்கரசு நாயனாரின் தமக்கையார் திருப்பெயர் திலகவதி அம்மையார். இவர் வேண்டுகோளின்படி சிவபெருமான் சூலை நோயைக் கொடுத்தனர். சமணத்தின் நின்று சைவத்திற்கு வரச்செய்தனர். சைவத்துக்கு வந்து பாடினர். திருநாவுக்கரசு என்னும் திருப்பெயர் சிவபெருமானால் வழங்கப்பட்டது.

இதனைப் பொறாத சமணர் சூழ்ச்சியால் மகேந்திரவர்மப் பல்லவன் ''நீற்றறை, நஞ்சு, யானை, கல்லைக் கட்டிக் கடலில் தள்ளல்'' ஆகிய கொடுந்தண்டனைகளை விதித்தனன். சிவபெருமான் திருவருளால் அத்தனையும் துன்பம் ஏதுமின்றி மீண்டனர். நீற்றறை ஏழுநாள், எழுவகைப் பிறப்பினைக் குறிக்கும். நஞ்சு கலந்தபால், வினைப்பயன் நுகர்வைக் குறிக்கும். யானை தன்முனைப்பைக் குறிக்கும். கல், மலத் திண்மையைக் குறிக்கும். நீற்றறையோடேழ்பிறப்பாம் நேர் நஞ்சு வினையானை ஆற்றுமுனைப் பாங்கல்மல ஆசு.

திருக்கயிலாயத் திருக்காட்சியினை அப்பர் திருவையாற்றிற் கண்டு வணங்கிப் பாடி மகிழ்ந்தனர். திருப்பூம்புகலூரில் பாடித் திருத்தொண்டு புரியுங்கால் வந்து குவிந்த பொன்னையும் மணியையும் குப்பையொடு வாரிக்

கொட்டினர். வானுலகத்துப் பெண்கள் முன்வந்து ஆடிப் பாடி மயக்கினர். திருவருளால் மயக்கை அகற்றினர். இறைவன் திருவடியை அணைந்தனர்.

29 வேணியார் - திருச்சடைமுடியார்; சிவபெருமான். குலச் சிறையார் நின்ற சீர் நெடுமாற வேந்தரின் தலைமை அமைச்சர். பாண்டியநாட்டு மணமேற்குடியினர். சிவனடியாருக்குச் செய்யும் சிறந்த பணியினர். மங்கையர்க்கரசியார் ஆணை வழித் திருஞான சம்பந்தரை மதுரைக்கு மறைக் காட்டினின்றும் வருவித்து வேண்டுவன செய்தனர். சம்பந்தர் அமணரை வென்றனர். சைவத்தைப் பரப்பினர்.

30 நாவலர் கோமான் - நம்பியாரூரர்; சுந்தரர். பெருமிழலைக் குறும்ப நாயனுர் மிழலை நாட்டுப் பெருமிழலையைச் சார்ந்தவர். நம்பியாரூரர் கழல் வணங்கும் நயத்தினர். அதனுல் எல்லாச் சித்தியும் பெற்றனர். நம்பியாரூரர் நாளைக் கயிலை செல்லப் போகின்ருரென்று முன்னுள் உணர்ந்தார். யோக வழியாகத் தன்னுயிரை முன்னுளே போக்கினர். போக்கிக் கயிலை சென்றனர். சிவபெருமான் திருவடியடைந்தனர்.

31 என்புருவர் - சிவபெருமானை வேண்டி என்புருவாகப் பெற்றனர். காரைக்கால் நகரில் தோன்றியவர். வணிகர் குலத்தினர். தந்தையார் தனதத்தர். பிள்ளைத் திருப் பெயர் புனிதவதியார். கணவர் பெயர் பரமதத்தர். மாங்கனியால் அடியவர்க்குத் திருவமுதூட்டிய மாண்பினர். கணவர் நிலை கண்டு இறையருளால் திருக்கயிலைக்கு நடந்து சென்று வணங்கினர். சிவபெருமானுல் அம்மையே என்றழைக்கப்பெற்றவர். சிவனுர் திருவாணை வழித் திருவாலங்காட்டுக்குத் தலையால் நடந்துவந்து திருவடிக்கீழ் அமர்ந்திருக்கும் பேறு பெற்றனர்.

திருத்தொண்டத் தொகையிற் காணப்படும் பெண்பால் அடியவர் மூவர். அவர், காரைக்காலம்மையார் எனப் படும் பேயார், மங்கையர்க்கரசியார், இசை ஞானியாராவர். இம் மூவருள்ளும் அம்மையார் ஒருவரே திருவருளால் திருப் பதிகம் பாடியருளினர். அவை வருமாறு: ''மூத்ததிருப் பதிகங்களிரண்டு, திரு இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி'' என்னும் நான்குமாம். இவை பதினொராந் திருமுறைக்கண் இரண்டாம் வரிசையில் திகழ்கின்றன.

32. அப்பூதியடிகள் நாயனுர், திங்களூரைச் சார்ந்தவர். மறையவர் குலத்தினர். காண்பதற்கு முன்னரே திருநாவுக் கரசின் திருப்பாதம் உள்ளத்தாலடைந்த தெள்ளியர்.

திருநாவுக்கரசர் திருப்பெயரால் ''மனைப்பாலுள்ள அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும் உளவெலாம்'' வழங்கி வந்தனர். மேலும் ''படிதிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாயுள்ள முடிவிலா அறங்களும்'' அவர் பெயரால் செய்து வந்தனர். பிள்ளைகட்கும் அப்பெயரே அமைத்துள்ளனர். திருநாவுக்கரசரை நேரில் காணும் பேறு பெற்றனர். வழிபட்டனர். விருந்தமைத்தனர். மூத்த திருநாவுக்கரசை வாழைஇலை கொய்துவர அனுப்பினர். கொய்யும் பொழுது பாம்பு கடித்தது. ஓடோடியும் வந்து இலையைத் தாயார் கையில் கொடுத்துக் கீழ் வீழ்ந்து இறந்தனன். பெற்றோர் அதை மறைத்து விருந்தூட்ட முயன்றனர். அப்பர் உண்மையுணர்ந்து திருப்பதிகம் பாடிப் பிள்ளையை எழுப்பினர். எல்லாரும் உடனிருக்க விருந்துண்டனர். அப்பூதியடிகளைத் திருப்பதிகத்தில் வைத்துச் சிறப்பித்தனர். அப்பூதியடிகள் சிவபெருமான் திருவடிப் பேறெய்தினர்.

33. நாதர் - சிவபெருமான். இல்லாள் - மனையாள். வாய்மருந்து - வாய் உமிழ்ந்த எச்சில். திருநீலநக்க நாயனார் திருச்சாத்த மங்கைக்குரியவர். மறையவர் குலத்தினர். சிவபெருமான் திருத்தொண்டர். சிவபெருமானையும் சிவனடியாரையும் வழிபடுந் திறத்தினர். திருவாதிரையினைச் சிறப்பாகக் கொண்டாடுபவர். ஒரு திருவாதிரை நன்னாளில் தம் மனைவியாருடன் சென்று திருக்கோவிலில் மனைவியார் துணைபுரியப் பூசை செய்தனர். சிவபெருமான் மேல் சிலந்தி விழுந்தது. அம்மையார் உமிழ்ந்து நீக்கினர். அதனைக் குற்றம் என்றனர்; இறைவன் குற்றமன்றென்றனர். உடனே மனைவியாரைச் சேர்த்துக் கொண்டனர். திருஞானசம்பந்தருக்கு நண்பர். அவர் திருவாணைப்படி திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்கும் அவர்தம் மனைவியார்க்கும் வேதியின் பாங்கர் படுக்க இடங்கொடுத்தனர். வேதியில் அருத செந்தீ வலஞ்சுழித்தெழுந்தது. சம்பந்தர் திருமணச் சடங்கினை இயற்றியவர். அத்திருமணப் பெருஞ் சோதியிற் கலந்து திருவடி எய்தினர்.

34. நமிநந்தியடிகளார் ஏமப் பேறூரைச் சார்ந்தவர். அந்தணர் குலத்தினர். திருவாரூர்த் திருக்கோவிலுக்குச் சிவபெருமான் திருவாணைப்படி தண்ணீரால் திருவிளக்கெரித்தனர். எந்நாளும் இவ்வாறே செய்தனர். திருவாரூர்ப் பிறந்தவர்கள் எல்லாரும் சிவகணங்களாகக் காணச் சிவன் செய்தருளினன். வணங்கினர் திருவாரூரிலேயே குடியிருந்

தனர். "திருத்தொண்டர்க்காணி'' என்னும் சிறப்புப் பெயர் திருநாவுக்கரசரால் திருப்பதிகத்துள் சிறப்பிக்கப் பெற்றவர். சிவபெருமான் திருவடியை எய்தியவர்.

35. ஆருறு - முப்பத்தாறு தத்துவம். நம்பியாரூரரும் சேரரும் சேரநாடு செல்லுங்கால் திருவையாற்றில் பெரு வெள்ளத்துடன் வந்த ஆறு விலகி வழிவிட இருவரும் சென்று வழிபட்டு மீண்டனர்.

36 மூன்றுண்டுப் பருவத்து ஞானசம்பந்தர் திருமுலைப் பாலுண்டு திருப்பதிகம் பாடிய திருவெற்றியர்.

37 மதுரைமாநகரில் சம்பந்தருடன் வழக்கில் தோற்ற அமணர் எண்ணுயிரவரும் தாங்கள் கூறிய சொற்பிழையாது கழுவேறினர்.

38 சம்பந்தரை எதிர்த்துவந்த புத்தன் தலையில் திருப்பதிக ஏடெழுதும் அன்பர் எடுத்து மொழிந்த "அத்திர'' மொழியால் இடிவ்ழுந்தது. அவன் மாண்டனன்.

39 திருக்கொள்ளம் பூதூரில் பெரு வெள்ளத்தால் ஓடஞ்செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஞானசம்பந்தர் "கொட்டமே கமழும்'' என்னும் திருப்பதிகம் பாடி அடியார் களை எல்லாம் ஏற்றி ஓடத்தைச் செலுத்தினர். எல்லாரும் சென்று வழிபட்டு மீண்டனர்.

40 திருநல்லூர்ப் பெருமணத்தின்கண் தமக்கு நிகழ்ந்த திருமணச் சடங்கில் வேள்வித்தீயினை வலம்வரத் தொடங் கினர்.காதலியைக் கைப்பற்றிக்கொண்டு திருக்கோவில் சென் றனர். "கல்லூர்ப்பெருமணம்'' என்னும் திருப்பதிகமும் "காதலாகிக்கசிந்து'' என்னும் திருப்பதிகமும் பாடியருளினர். அங்குத் தோன்றிய பெருஞ்சோதியில் எல்லாரையும் புகச் செய்து, தாம் கைப்பற்றிய காதலியுடன் சென்று திருவடி எய்தினர்.

41 ஏயர்கோன் கலிக்காமர் திருப்பெரு மங்கலத்து வேளாண்குடியினர். நம்பியாரூரர் சிவபெருமானைத் தூது விட்டது பிழையென்று வெகுண்டனர். நம்பியாரூரர் பிழையுடன்பட்டுச் சிவபெருமானை வேண்டினர். சிவபெரு மான் கலிக்காமருக்குச் சூலை நோயைக் கொடுத்தனர். வன்றொண்டர் வந்தால் தீருமென்றனர். கலிக்காமர் வயிற்றைக் கீறி மாண்டனர். நம்பியாரூரர் கண்டு தாமும் சாகத் துணிந்தனர். சிவனருளால் கலிக்காமர் எழுந்து

வண்றொண்டர் கையைப் பிடித்தனர். இருவரும் ஒருங்கு நண்பராயினர்

42 திருமூலர் திருக்கயிலையிலிருந்து பொதிய மலைக்கு எழுந்தருளினர். வழியில் சாத்தனூரின்கண் ஆமேய்க்கும் மூலன் இறந்துவிட்டனன். பசுக்கள் வருந்தின. திருமூலர் யோக வழியால் தம்முயிரை அவ்வுடம்பில் புகுத்தினர். பசுக்கள் மகிழ்ந்தன. பசுக்கள் வீடுசென்றன. பின் தன்னுடம்பைத் தேடினர்; கண்டிலர். திருவாவடுதுறை அரச மரத்தடியில் அமர்ந்திருந்து சிவபெருமான் ஆணையால் தனித் தமிழாகமம் பாடியருளினர். அஃது "ஒன்றவன்றானே" என்று தொடங்குந் திருமந்திரம். மூவாயிரம் ஆண்டுகள் யோகத்திலிருந்து மூவாயிரம் திருப்பாட்டுக்கள் பாடினர்.

43 அந்தகன் - குருடன். தண்டியடிகள் ''திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார்.'' பிறக்கும்பொழுதே கண்ணில்லார். அமணர்களால் தூர்க்கப்பட்ட திருவாரூர்க் குளத்தைத் தோண்ட முயன்றனர். குளத்துள்வாயிலில் தறி நட்டு வெளியிலுந் தறிநட்டுக் கயிறுகட்டுவித்தனர். கயிற்றின் துணைகொண்டு வெட்டிய மண்ணை வெளியில் கொண்டுவந்து கொட்டினர். இதனைப் பொறா அமணர் எல்லாவற்றையும் பிடுங்கி எறிந்தனர். உன் கடவுளருளால் கண் பெறுக என்று இழிபுரைத்தனர். அஞ்செழுத் தெடுத்தோதி மணி நீர் வாவி மூழ்கினர். திருவருளால் கண்பெற்றனர். அமணர்கள் ஊரைவிட்டகன்றனர். குறைப் பணியையும் முடித்தனர். திருவடிப் பேறுபெற்றுச் சிறந்தனர்.

44 உருளாயம் - சூதாட்டத்தில் உருளும் பாய்ச்சிகை. ஆயம் - சூதாட்டம். பொருளாயம் - பொருள் கூட்டம். மூர்க்க நாயனார் தொண்டை நாட்டிலுள்ள வேற்காடு என்னும் ஊரினர். மிக்க செல்வவளம் படைத்தவர். மெய்யடியார்கட்குத் திருவமுது முதலாயின நல்கிப் பணி புரிந்து வந்தனர். செல்வவளஞ் சுருங்கிய காலத்துத் தாம் முன்பயின்ற சூதின் வழித் தொண்டியற்றி வந்தனர் பின் சிவவுலகத் தெய்தி யின்புற்றனர்.

45 யாகம் - சிவவேள்வி. சோமாசிமாற நாயனார் திருஅம்பரில் உள்ளவர். மறையவர் குலத்தர். சிவவேள்வி செய்பவர். சிவனடியாரைப் பேணுபவர். திருவைந்தெழுத்து ஓதுபவர். வன்றொண்டர்க்கு நண்பர். வன்றொண்டர் பாதம் தொழும் பேற்றால் சிவலோகம் எய்தி இன்புற்றனர்.

46 வன்றொண்டப் பெருந்தகையார் திருப்பாட்டே சிவபெருமானுக்கு மிகுந்த உகப்புத்தரும் திருப்பாட்டாம்.

அதுகொண்டு பூசை செய்வதே அரன் திருவாணையாம். பொருட்டுறையன் - வன்றொண்டர். அருட்டுறையார் - சிவ பெருமானார்.

47 அங்கசன் - மன்மதன். அவன் சிவபெருமான்மேல் விடுத்த ஐவகைப் பூவும் அடுகணையாயின. சாக்கியர் எறிந்த செங்கல் தேமலராயிற்று. சாக்கிய நாயனார் சங்கமங்கை என்னும் ஊரினர். வேளாண் குலத்தினர். புத்த மதத் தைச் சார்ந்தவர். உண்மை யாராய்ந்து சைவச் செந் நெறியே மேலெனக் கண்டனர். கைக்கொண்டனர். சிவ லிங்கத்தின் மேல் கல்லெறிந்து வழிபட்டனர். அதுவுந் திருவருட் டூண்டுதலே என்று கொண்டனர்.

48 இதம் - இனிமை. அனஞுசெய்தல் - திருவமுதூட் டல். சிறப்புலி நாயனார் திருவாக்கூரைச் சார்ந்தவர். மறையவர் குலத்தினர். 'ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார்'' அஞ்செழுத்தோதுபவர். வேள்வி செய்பவர். அனைத்தையும் சிவபெருமான் திருவடிக்கு ஒப்புவிக்கும் அன்பினர். சிவபெருமான் திருவடி இன்புற்றனர்.

49 காய்கறி வேறொன்று தொடாதவர். மறைந்த கோலத்து வந்த வயிரவர். சேய்க்கறி - பிள்ளைக்கறி. சிறுத் தொண்டர் செங்காட்டங் குடியினைச் சார்ந்தவர். மாமாத் திரர் குலத்தவர் சிவனடியார்க்குச் சிறந்த தொண்டர். புலிகேசியை வென்றவர். படைத்தலைவர். சம்பந்தர்க்கு அன்பர். சீராளதேவர்க்குத் தந்தையார். வெண்காட்டு நங்கைக்குக் கணவனார். பெருமானுக்குப் பிள்ளைக்கறி படைத்துப் பெரும்பேறுபெற்றவர். கொன்றைவேணியார் காட்சி கொடுத்தருளி'' நின்ற தொண்டர், மனைவியார் நீடு மகனார் தாதியார் என்றும் பிரியாதேயிருக்க உடன் கொண்டேகினார்.

புறநானூற்றின்கண் ''ஒருமகனல்ல தில்லோள், செரு முகம் நோக்கிச் செல்கென (உளகூ) விடுமே'' என்னும் வியத் தகு செயல் ஏற்புடைத்தாயின் பிள்ளைக்கறியும் ஏற்புடைத் தாம் என்க. நாட்டுநலம் வேண்டிமகன் நல்குவதும் ஏற் புடைத்தேல், வீட்டுநலத் தாற்செயலும் வேண்டு.

50 நெறிவார் சடையார் - முறையாள் நீண்ட திருச் சடையினையுடைய சிவபெருமானார். உலகத்துயிர்களின் சொல்லும் செயலும் ஆகியவற்றை இயல்பாகவே உணரும் சிவபெருமான் போல் கழறிற்றறிவாரும் அவர் திருருவ ளால் அங்ஙனமே அறியுந் திருவினர்.

51 கணநாத நாயனர் சீகாழித் திருப்பதிக்குரியவர்-திருமறையவர் குலத்தர். தொண்டர்களைச் சிவத்தொண்டினிற் பயிற்றிய சீர்மையர். தொண்டுகளாவன: க. நந்தன வனப் பணி உ. மலர் கொய்தல் ங. தொடை புனைதல் ச. திருமஞ்சனப் பணி ரு. திருவலகிடுதல் சு. திருமெழுக்கமைத்தல் எ. திருவிளக்கிடுதல் அ. திருமுறை எழுதுதல் கூ. திருமுறை வாசித்தல் என்பன. மனையறத்தினர். சம்பந்தப் பெருமானுர் திருவடி வழிபாட்டினர். கயிலைமால் வரை எய்திக் கணங்கட்குத் தலைவராய் வீற்றிருக்கும் பேறு பெற்றனர். ஒன்பான் வடிவுகொள் ஒப்பில் சிவனடிக்கிங்கொன்பான்தொண் டாக்குவித்தார் ஓர்ந்து.

52. ஆற்றரிதாம் ஈசன் – முடிவிலாற்றலுடைய சிவபெருமான். அடி - திருவடி. முடி - அதனையே தமக்கு மணிமுடியாக. புனைந்து - சூடி. கூற்றுவ நாயனர் களந்தை முதல்வராவர். திருவைந்தெழுத்து ஓதுபவர். திருத்தொண்டு புரிபவர். பல வேந்தரையும் வென்றவர். முடியொன்றும் இல்லாது அரசர் திருவெலாம் பெற்றுச் சிறந்தார். தில்லை வாழந்தணரைத் தமக்கு மணிமுடி புனைய வேண்டினர். அவர்கள் இணங்காமை கண்டு இரவில் துயிலும்போது "அடியேன் தனக்கு முடியாகப் பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும் எனப்பரவும், பற்று விடாது துயின்றனர்." சிவபெருமான், "கனவில் பாத மலரளிக்க, உற்ற அருளால் அவை தாங்கி உலகமெல்லாந் தனிப்புரந்தார். "திருக்கோவில்களுக்கு எல்லாம் தனித் தனியே பூசைக்கு வேண்டுவன செய்வித்து" "உம்பர் மகிழ அரசளித்தே உமையாள் கணவன் அடி சேர்ந்தார்."

53 ஆரூரர்-நம்பியாரூரர்; வன்றெண்டர். வன்றெண்டர் சிவபெருமானைத் தூதாக்கிய நாள், கூன், குருடு முதலிய குறையுடையார் குறைகள் நீங்கப்பெற்றன.

54 பொய்யடிமையில்லாத புலவர் - "மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே ஆளானர், பொய்யடிமையில்லாத புலவரெனப் புகழ்மிக்கார். சேக்கிழார் பெம்மான் நம்பியாண்டார் நம்பிகள் மதுரைச் சங்கப் புலவர்கள் எனக் குறித்த குறிப்பினை மேற்கொள்ளாமை நினைவு கூரத்தக்கது.

55 புகழ்ச் சோழ நாயனர் உறையூரின்கணிருந்து உலகாண்ட ஒருபெரு வேந்தர். முறைபுரிந்து திருநீற்று முதல் நெறியே பாரிக்கும் பண்பினர். திறைகொணரா மன்னன் ஓங்கெயில் சூழ்மலை அரணத்துள்ளுறைவான் அதிகன்" எனக் கேட்டனர். "ஈங்குநுமக் கெதிர் நிற்கும்

அரணுளதோ" என வேந்தர் வினவினர். படை திரண் சென்று போருடற்றி வென்று மீண்டன. அமைச்சர்கடு வென்ற சிறப்பொடு "மன்னும் கருவூர் நகர் வாயிலின் வாய் முன்வந்த சுருந்தலை மொய்குவைதான், மின்னுஞ் சுடர் மாமுடி வேல்வளவன். தன்முன் கொணர்ந்தனர் தானை யுளோர்." அத்தலைகளுள் சடைமுடியோடு கூடிய தலை யொன்று கண்டனர் வேந்தர். மிக வருந்தினர். மகனுக்கு முடிசூட்டி, அச்சடை முடித்தலையினைப் பொற்றட்டேந்தித் தீக்குளித்தனர். சிவபெருமான் திருவடி நிழலை எய்தினர்.

56 மூரி - வலிமை. தூர்த்தவேடம்-காமுகர் கோலம். பூரி - பொற்கொடை. நரசிங்க முனையரைய நாயனார், திருமுனைப்பாடி நாடாளுங் காவலனார். திருக்கோயில் களுக்கு வேண்டும் செல்வம் நல்கிப் பூசை நிகழ்த்துவித் தனர். 'ஆறணிந்த சடைமுடியார்க்கு ஆதிரை நாடொறும், வேறு நிறை வழிபாடு விளங்கிய பூசனை மேவி, நீறணியும் தொண்டர் அணைந்தார்க்கெல்லாம் நிகழ்பசும்பொன் நூறு குறையாமல் அளித்தின்னமுது நுகர்விப்பார்.!' ஒருநாள் காமுகக் கோலத்துடன் வந்த சிவனடியாரை ஏனையார் அரு வருத்தனர். நாயனார் மிகவும் வருந்தினர். நீறணிந்தாரை இகழக்கூடாது என்றனர். அவர்க்கு வேண்டுவன நல்கி இரு நூறு பொன் அளித்தனர். வன்றொண்டப் பெருமானை அன் பினால் மகன்மைக்கொண்டவர்.

57 சிக்குதல் - அகப்படுதல். அதிபத்த நாயனார் நாகபட்டினத்தைச் சார்ந்தவர். "நுளையர்தம் தலைவராய் உள்ளார்." மீன்வலையிற் படுவனவற்றுள் தலைப்படுமீனை" நட்டமாடிய நம்பருக்கென நளிர் முந்நீர் விட்டுவந்தனர் விடாத அன்புடன் என்றும் விருப்பால். இதனால் யாவரும் அறியவேண்டுவது இன்பவடிவா மிறைவற்கேற்பிக்கும் நற் படைப்பிங், கன்புயிர் போக்காமை யறி என்னும் மெய்ம்மை யாம். பலநாள் ஒருமீனே வந்தது. அதனையும் சிவபெரு மானுக்கென்றே விட்டு உணவின்றி இருந்தனர். ஒருநாள் "தூநிறப் பசுங்கனக நற்சுடர் நவமணியால், மீனுறுப்புற அமைந்துல கடங்கலும் விலையாம், பான்மை அற்புதப் படிய தொன்றிடு வலைப்படுத்தார்." "சென்று பொற்கழல்சேர் கெனத் திரையொடும் திரித்தார்." இறைவன் விடை மேலிவர்ந்து காட்சி கொடுத்தருளினன்.

58 கைதடிதல் - கையை வெட்டுதல். கலிக்கம்ப நாயனார் திருப்பெண்ணாகடத் திருவூரினர். வணிகர் குலத் தைச் சார்ந்தவர். அடியார்க்குத் திருவமுதூட்டும் அருந் தொண்டினர். தம் வீட்டு வேலைக்காரன் வெளியேறிச்

சிவனடியார் திருக்கோலத்துடன் வந்தனன். நாயனுர் திருவடி விளக்கக் குனிந்தனர். மனைவியார் யாரென்று ஐயுற்றனர். மறித்து நோக்காது மனைவியார் கையை வடிவாள் கொண்டெறிந்தனர். தாமே அத்தொண்டினைப் புரிந்தனர். சிவபெருமான் திருவடி நிழலை எய்தினர்.

59 கலிய நாயனுர் திருத்தொண்டை நன்ஞட்டுத் திருவொற்றியூரைச் சார்ந்தவர். தயிலவினைத் தொழிலர். பெரும் செல்வர். ''செல்வ நெறிப் பயனறிந்து திருவொற்றியூரமர்ந்த, கொல்லைமழ விடையார் தம் கோயிலின் உள்ளும் புறம்பும், அல்லும் நெடும் பகலும் இடும் திருவிளக்கின் அணிவிளைத்தார்.'' வறுமையற்ற காலத்தும் பலவகையாலும் தொண்டினை முட்டின்றிச் செய்துவந்தனர். மனைவியாரை விற்றேனும் திருப்பணி செய்வதென விலைகூறினர். கொள்வாரில்லை. திருவிளக்குத் திரியிட்டு - எண்ணெய்க் கீடாகத் தம் குருதியினை நிறைப்பதென்று மிடறரியத் துணிந்தனர். கண்ணுதலார் அவர் தம் திருக்கையினை நேர்வந்து பிடித்தருளினர். மழவிடைமேல் காட்சியருளினர்.

60 அண்ணலடியார் - சிவனடியார். தண்ணளி - பேரிரக்கம். எண்ணமுற - கருத்து நிரம்ப. சத்தி நாயனுர் வரிஞ்சையூரைச் சார்ந்தவர். விழுமிய வேளாண் குலத்தினர். "அத்தராகிய அங்கணர் அன்பரை. இத்தலத்தில் இகழ்ந்தியம்பும் உரை, வைத்த நாவை வலித்தரிசத்தி" படைத்தவர். சத்திநாயனுர் அம்பலவாணர் திருவடியெய்தி இன்புற்றனர்.

61 ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் பல்லவர்தம் குலமரபில் தோன்றினர். உலகாண்டு வந்தனர் ஆட்சியினைத் தம் மகனுக்கு நல்கித் தாம் "அண்டர் பிரான் அமர்ந்தருளும் ஆலயங்களானவெல்லாம், கண்டிறைஞ்சித் திருத்தொண்டின் கடனேற்ற பணிசெய்தே, வண்தமிழின் மொழிவெண்பா ஒரொன்ரு வழுத்து வார்." அம்முறையில் அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவெண்பாக்கள் பதினெராந் திருமுறைக்கண் சேர்க்கப்பட்டுள்ளன. அவ்வெண்பாக்கள் இருபத்து நான்காகும். இவற்றுள், கo, உ௩ ஆகிய இரண்டு வெண்பாக்களும் ஊர்பற்றித்தோன்றியனவல்ல. ஏனைய இருபத்திரண்டு வெண்பாக்களும் ''தில்லைச் சிற்றம்பலம்'' முதலாக ''திருமயானம்'' முடிவாகவுள்ள திருவூர்களைப் பற்றியனவாகும். இவற்றை யோதிப் பூத்தூவிப் போற்றுதலும் ஏற்புடைத்தாகும்.

62 நம்பியாரூரர்க்குச் சேரர்கோன் கொடுத்த பெரும் பொருட் குவியலைத் திருமுருகன் பூண்டிவழியில் பூதகணங்கள் வேடுவர் வடிவில் வந்து கவர்ந்தன. அப்பொழுது நம்பியாரூரர் சிறிதும் மனத் தளர்ச்சி கொண்டாரல்லர்.

63 கணம்புல் - ஒருவகைப் புல். கணம்புல்ல நாயனுர் டைவெள்ளாற்றுத் தென் கரைப்பாலுள்ள இருக்குவேளூ வரச் சார்ந்தவர். ''அப்பதியில் குடிமுதலவர்க்கு அதிபர்.' ''தாவாத பெருஞ் செல்வந்தர்'' ''தில்லைநகர், திருப்புலீச் சரத்தின்கண் விளக்கெரிக்குந்'' திருத்தொண்டினர். வறுமையுற்ற காலத்தும் உள்ளன மாறி விளக்கெரித்து வந்தார். அதுவும் முட்டுற்றது.'' அயலவர்பால் இரப்பஞ்சினர். ''காயமுயற்சியில் கணம் புல்லுக்கொடு வந்து விற்று விளக் கெரித்தனர். ஒருநாள் கணம்புல்லும் விலைப்போகவில்லை. கணம் புல்லையே யிட்டு விளக்கெரித்தார். அதுவும் போதாதாகவே'' தம் திருமுடியை என்புருக மடுத்தெரித்தார். எம்பெருமான் திருவருளால் சிவலோகத்துற்ருர்.

64 பாரின் - உலகின். மூவேந்தர் - முடியுடைய சேர. சோழ, பாண்டியராகிய மூவேந்தர். ஆலயங்கள் - திருக்கோவில்கள். காரி நாயனுர், திருக்கடவூரைச் சார்ந்தவர்; மறையவர் குலத்தர். ''வண் தமிழின் துறையான பயன் தெரிந்து சொல் விளங்கிப் பொருள் மறையத் தமிழ்க்கோவை தம் பெயரால்'' அமைத்தனர். அஃதாவது காரியார் கோவை என்பதாம். அக்கோவையினை நன்கு விளக்கி மூவேந்தர் பாலும் பிறர்பாலும் பெரும் பொருள் பெற்றுத் திருக்கோவில்கள் பலவும் சமைத்தனர்.

65 நின்றசீர் நெடுமாற நாயனுர் பாண்டியநாட்டு முடியுடை வேந்தர். மங்கையர்க் கரசியாரின் மாண்பு மிகுமணுளர். குலச்சிறையாரை முதலமைச்சராகக்கொண்டு செங்கோல் செலுத்திய முதல்வர். பழவினைப் பாங்கால் ''தடுமாறும் நெறியதனைத் தவமென்று தம்முடலை அடுமாறு செய்தொழுகும் அமண் வலையில் அகப்பட்டனர். அதினின்றும் ஞானசம்பந்தப் பெருமானுரால் விடுவிக்கப்பட்டுச் சைவஞ் சார்ந்து செந்நெறி பரப்பினர். திருநெல்வேலிச் செருக்களத்தில்'' வடபுலத்து முதல் மன்னர் படை சரியப், புனையுநறுந் தொடைவாகை பூழியர் வேம்புடன் புனைந்தவர்.'' ''திரை செய்கடல் உலகின்கண் திருநீற்றின் நெறி விளங்க'' நின்றவர். ''அரசுரிமை நெடுங்காலம் அளித்திறைவர் அருளாலே, பரசுபெறுஞ் சிவலோகத் தின்புற்றுப் பணிந்திருந்தார்.

66 வாயிலார் நாயனர், தொண்டைநாட்டைச்சார்ந்த திருமயிலாப்பூரைச் சார்ந்தவர். விழுமிய வேளாண் குலத்தினர். அகத்தவநெறியில் ''மறவாமை யானமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி, உறவாதி தனையுணரும் ஒளி விளக்குச் சுடரேற்றி இறவாத ஆனந்தம் எனுந் திருமஞ்சன மாட்டி, அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத் தர்ச்சனை செய்வார்.'' இவ்வாறு நெடுநாள் செய்து சிவபெருமான் திருவடி நீழல் எய்தினர். இந்நாயனர்க்குத் திருமயிலாப்பூர் கபாலீசுரர் திருக்கோயிலில் தனித்திருக் கோயிலுள்ளது.

67 வினை - போர்வினை. முனையடுவார் நாயனர் திருநீடுரைச் சார்ந்தவர். விழுமிய வேளாண் குலத்தவர். ''மாற்ருர்க் கமரில் அழிந்துள்ளோர் வந்து தம்பால் மாநிதியம், ஆற்றும் பரிசு பேசி அதனை நடுவுவைத்து,'' போருக்குச் சென்று வென்றிபெற்று அப்பொருளைப் பெறுவர். ''இன்ன வகையால் பெற்ற நிதி எல்லாம் ஈசன் அடியார்கள் வழி பாட்டிற்கும், திருவமுதூட்டற்கும் ஆக்கியுள்ளனர். பல நாள் தொண்டாற்றியபின். சிவலோகம் எய்தி இன்புற்ருர். இதனேடொத்த புறப்பாட்டு ''பருத்திப் பெண்டின்'' (கஉடு) என்பதாம். போரில் ஒருவற்காப் போந்து வெல்லல் தொல்தமிழர், சீர்தொண்டர் மாட்டுமுள!தேறு என்பதனல் தொண்டர் மறமான மிக்க மாண்புடையா ரென்பதும் புலனும்.

68 அழகிய புகலூர் வாழும் சிவபெருமானைப் பணிந்து பாடிப் பொன் வேண்டி நின்றனர். ''வறிது புறம்போந்தனர் ''நம்பியாரூரர். திருமுன்றினில் வந்து திருப்பணிக்காக வந்திருந்த செங்கற்களைக் கொணர்வித்துயரம் பண்ணி'' ''வெயிலுந்திய வெண்பட்டதன்மேல் விரித்துப் பள்ளி மேவினர்.'' ''சுற்றும் இருந்த தொண்டர்களும் துயின்றனர்.'' ''பரவையார் கேள்வனர் பள்ளியுணர்ந்தனர்; வெற்றி விடையார் அருளாலே வேமன்கல்லே விரி சுடர்ச் செம் பொற்றிண்கல்லாயின கண்டு புகலூர் அருள் போற்றினர். ''தம்மையே புகழ்ந்தெனத் திருப்பதிகம் பாடிப் பொற்குவையோடு மீண்டனர்.

69 கழற்சிங்க நாயனர். காடவர் கோனவர். தம் பட்டத்துத்தேவியார் திருவாரூர்த் திருக்கோவில் பூமண்டபத்தின் கீழ் விழுந்து கிடந்த பூவினை எடுத்து மோந்த குற்றத்திற்குக் கையை முறை செய்த காவலர்.

70 நடங்கழியார் - ஒரு காலமும் திருக்கூத்து நீங்காமவர். இடங்கழி நாயனர் கோனட்டுக் குரியவர். கொடுதபாளூர் என்னும் தலைநகரிலிருந்து அரசாண்டு அரனடி

யார்க்கு வேண்டும் திருத்தொண்டு புரியும் அன்பினர். அவ்வூரின்கண் சிவனடியார் ஒருவர் மெய்யடியார்கட்குத் திருவமுதளித்த திருத்தொண்டர். ஒருநாள் அடியார்க்கமுதாக்க ஏதுங் காணாமல் வருந்தினர். அரசர் பண்டாரத்தில் அந்நாட்டில் நெற்கூட்டில் ''புரைசெறி நள்ளிருளின்கண் புக்குமுகந்தெடுத்தனர்.'' காவலர் பிடித்து அரசன்பால் விடுத்தனர். அரசன் உண்மை உணர்ந்து அடியாரைப் பணிந்து ''இவரன்றே பண்டார''மென்று விடுவித்தனன். வேண்டுநெற்கொண்டுசென்று தொண்டு புரிய வேண்டினன்.

71 கருத்தன் - கடவுள். அருத்தி - விருப்பம். செருத்துணை நாயனார் தஞ்சாவூரினர். விழுமிய வேளாண் குடி முதல்வா. இவர் திருவாரூர்த் திருக்கோவிலின் கண் திருத்தொண்டு புரியும் சிறப்பினர். உலகம் புகழும் பல்லவர் கோன் கழற்சிங்கர்தம் பட்டத்துத் தேவியுடன் திருவாரூர்ப் பெருமானை வழிபட வந்தனர். திருமுன் சென்று வழிபட்டுக் கொண்டிருந்தனர். பெருந்தேவியார். திருச்சுற்றை நோக்கி மகிழ்ந்து கொண்டுவந்தனர். வரும்பொழுது ''நிலவு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்ததொரு மலரை'' இதுகாறுங் காணாத புதியதாக இருந்தது கொண்டு எடுத்து. மோந்தனர். அது கண்டு செருத்துணை நாயனார் வேகமாக வந்து தேவியார் மூக்கை அரிந்தனர். வியத்தகு புதுப் பொருள்கள் திருக்கோவிலுக்கு வந்த பின்னரே வேந்தருள்ளிட்ட ஏனையார் மாளிகைக்கு வரும் என்னும் மெய்ம்மை இதனால் உணரலாம். வேந்தறியா மிக்க வியப்பாம் பொருள் காண்பாம். வாய்ந்த சிவன் கோவில்வளாகத்து. தேவியார் மூக்கரிந்ததுணர்ந்த மன்னன் உண்மையுணர்ந்து அவர் செங்கையினைத் துணித்தனர். இதனால் மன்னர் முறைசெய்யு மாண்பு ஓர்ந்துணர்க. செருத்துணை நாயனார் பன்னெடுநாள் திருத்தொண்டு புரிந்து, ''துய்ய செய்ய பொன் மன்றுள், எடுத்த பாத நிழலடைந்தார்.

72 வற்கடம் - பஞ்சம். ஊண் - உணவு. மெய்வாடி - உடல் வருந்தி. நற்கலசம் - திருமுழுக்காட்டுந் திருக்குடம். பொற்காசு - படிக்காசு. புகழ்த்துணை நாயனார். ''செருவிலிபுத்தூர் மன்னும் சிவமறையோர் திருக்குலத்தார். ''சிவவழிபாடு தவிராது செய்து வந்தனர். மிகுந்த பஞ்சம் வந்து தலைப்பட்டது. வருந்தியும் வழிபாடு முட்டாது செய்து வந்தனர். ''சாலவுறு பசிப்பிணியால் வருந்திநிலை தளர்வெய்திக் கோல்நிறை புனல் தாங்கு குடந்தாங்கமாட்டாமை, ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ்த்தயர்ந்தார். சிவபெருமான் படிக்காசருளினர். படிக்காசு பெற்று வழி

பாடியற்றி வந்தனர், பஞ்சம் நீங்கியது. பின்னும் பலநாள் தொண்டு புரிந்து, திருவடி சேர்ந்தார்.''

73 பொலிதல் - விளங்குதல். விரையாக்கலி - திருவாணை; இறைவனாணை. கடிந்தார் - நீக்கினார். கோட்புலி நாயனார் நாட்டியத்தான் குடியைச்சார். விழுமிய வேளாண் குலத்தர். படைத் தலைவர். நம்பியாரூரரை விருந்தாக வரவேற்றார். நண்பினால் திருவமுது செய்வித்தார். ''அடியேன் பெற்ற மக்களிவர் அடிமையாகக் கொண்டருளிக் கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக் கருணை அளிக்க வேண்டுமென்றார்.'' நம்பியாரூரர் ''தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத் தூய மக்கள்.'' எனக் கொண்டார். அவர்களை உச்சி மோந்து வேண்டுவ கொடுத்துச் சிறப்பித்தார். கோட்புலியார் போருக்குப் போகும்போது தாம் என்றும் செய்து வரும் திருக்கோவில் திருத்தொண்டு முட்டின்று நிகழத்தாம் வரும் அளவும் வேண்டிய நெற்கூடு வைத்தார் சுற்றத்தார் எல்லாரையும் அழைத்து இந்நெல்லை;யாரும் எடுத்தல் கூடாதென்று கட்டுரைத்துச் சென்றனர். இவர் சென்ற சிலநாளில் பஞ்சம் ஏற்பட்டது. ''சுற்றத்தார் உணவின்றி இறப்பதினில், பெற்ற முயர்த்தவர் அமுதுபடி கொண்டாகிலும் பிழைத்துக், குற்றமறப் பின்கொடுப்போம் எனக் கூடு குலைத்தழித்தார்.'' வென்றியொடு வேண்டும் பொருள்பெற்று மீண்ட கோட்புலியார் இதனை உணர்ந்தார். சுற்றத்தார்க்குப் பரிசு வழங்குவதுபோல் அழைத்து அனைவரையும் கொன்றனர். பால்குடி மாறாப் பிள்ளையையும் கொன்றனர், சிவபெருமான் காட்சி கொடுத்தருளினர். கொல்லப்பட்டார் அனைவர்க்கும் சிவலோகம் அருளினர். கோட்புலி நாயனார், உடனணைந்தின்புற்றார்.

74 மாவணம் - சிறந்த திருமணம். ஆவணம் - எழுத்து முறி; அடிமைச்சீட்டு. நம்பியாரூரர் திருமணத்தின் போது சிவபெருமான் கிழவந்தணக் கோலத்துடன் வந்து ஆவணங்காட்டி திருவெண்ணெய் நல்லூர்ப் பேரவையில் வழக்குரைத்து அடிமையாகக் கொண்டருளினர்.

75 வாய்ப்ப - திருவருளால் திருவடிப் பேறும் பெருவாழ்வு வாய்ப்ப. தோய்ப்ப - தோயும்படி.

79 கருமேனி - இருவினை காரணமாக எய்தும் உடற்பிறவி.

80 அஞ்சுபதம் - அஞ்சுசொல். அஃதாவது சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு. இவற்றின் முதலெழுத்துக்கள் கூடி ''சிவயநம'' என வழங்கப்படுகின்றது.

81 பாடு - பெருமை. முனைப்பாடியர்கோன் - திருமுனைப்பாடி நாட்டுக்கு முதல்வர். நம்பியாரூரர்.

82 பித்தர் - அறிவுத் திரிபுடையார். வைதல் - திட்டுதல். மாத்திரமோ - மட்டுமோ. ஆரூரற்கு - வன்றொண்டர்க்கு.

83 மன் - நிலைபெற்ற. தானம் - இடம். பூசலார் நாயனார் தொண்டை நாட்டைச் சார்ந்த திரு நின்றவூரினர். மறையவர் குலத்தர். அடியார்க்கு வேண்டுவன கொடுத்து அரனார்க்குத் திருக்கோவில் எடுப்பிக்க நினைந்தனர். கையிற் பொருளின்மையைக் கருதிலர். எல்லாம் மனத்தால் தேடிப் பல ஆண்டுகள் செல்லத் திருக்கோவில் கட்டி முடித்தனர்.'' கங்குல் போதும் கண்படாது;செய்தனர்.''

கடவுண் மங்கலமாகிய தாபரய் மன்னும் நாள் குறித்தனர். இந் நாயனார் அகத்துத் தொடங்கிய நாள் தொட்டுக் ''காடவர் கோமான்கச்சிக்கற்றளி எடுப்பித்தனன்.'' அம் மன்னன் குறித்த நாளும் அந்நாளாகவே இருந்தது. சிவபெருமான் மன்னன் கனவில் தோன்றி ''நின்றவூர்ப் பூசலன்பன் நெடிது நாள் நினைந்து செய்த, நன்று நீடாலயத்து நாளை நாம்புகுவோம்'' என்றருளினர். உன்னுடைய நாளை மாற்றிக்கொள் என்றனர். அரசன் திரு நின்றவூர் வந்து பூசலாரைக் கண்டு உண்மையுணர்ந்து வழிபட்டனன். பூசலார் தம் மனக்கோவிலில் சிவபெருமானை நிலை நிறுத்திப் பலநாள் வழிபட்டுப் ''பொன்புனை மன்றுளாடும் பொற்கழல் நிழல்புக்கார்.''

84 மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தப் பெருமானை மதுரைமாநகருக்குத் திருவருளால் வரவழைத்துச் சமணிருள் போக்கித் திருவெண்ணீற்றொளி பெருக்கிய செந்தமிழ்ச் செந்நெறிச் செல்வியார். இவர்தம் பெருமை ''எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே இருந்தமிழ் நாடுற்ற விடர் நீக்கித் தங்கள், பொங்கொளிவெண் திருநீறு பரப்பினாரைப் போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே.'' என்னும் சேக்கிழார் பெம்மான் திருமொழியானுணரலாம். ''தென்னர் கோமான், மாசில் புகழ்நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப்பின்னை, ஆசில் நெறியவரோடும் கூட ஈசர் அடி நிழழ்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார்.'' இவருடன் திருவடிப் பெரும் பேறெய்தும் பொருட்டு நின்றசீர் நெடுமாறர் முன்னரே சென்று சிவலோகத் தமர்ந்திருக்கும் பேறு பெற்றார் என்ப

தனை ஈண்டு நினைவுகூர்க. செந்நெறிசேர் காதலர்கள் சேர்வர் சிவனடிக் கீழ், அந்நெறிவாழ் மானிமாற ராங்கு.

85 கீழ் - கோவணமொடு இணைக்கும் கயிற்றுக் கீடாக அமைத்துக்கொள்ளுந் துணி. நேச நாயனார் காம்பீலி நகரத்தைச் சார்ந்தவர். அறுவையர் குலத்தினர். அறுவையர் - கைக்கோளர்; நெசவாளர். ''சிவனடியார்கட்கு ஆவன செய்யும்'' தவத்தினர். 'உடையொடு நல்ல கீளும் ஒப்பில் கோவணமும் நெய்து, விடையவர் அடியவர்க்கு'' வேண்டுமாறு கொடுத்து வந்தனர். இவ்வரும் பெருந்தொண்டினை பன்னாள் இயற்றி ''அரனடி நீழல் சேர்ந்தார்.''

86 இகல்-முரண்; மாறுபாடு, பகை. முந்து - பழைமை. தந்தி - யானை. வாயில் - வழி. கோச்செங்கட் சோழ நாயனாரின் திருத்தந்தையார் சுபதேவர். தாயார், கமலவதி. தாயார் ''மக்கட் பேறின்மையினால் மாதேவி வரம் வேண்டச், செக்கர் நெடுஞ்சடைக் கூத்தர் திருவருளால்'' தோன்றியவர். பிள்ளைப்பேற்றுக் காலத்து நிகழ்ந்த பெருவியப்புக்குரிய அருஞ்செயல் வருமாறு: ''காலம் உணர், பழையார் ஒரு நாழிகை கழித்துப் பிறக்கு'' மேல் இப்பசுங்குழவி, உழையார் புவனம் ஒரு மூன்றும் ஆளும் என்றனர். இதனைக்கேட்ட அருமைத் தாயார். அவ்வாறு நிகழுவதற்குத் தன்னைத் தலைகீழாகத் தூக்குவித்துக்கொண்டனர். ஒரு நாழிகை கழித்தது இறக்கி விடச் செய்தனர். வயிற்றினுள் கிடந்த தியக்கத்தால் பிள்ளையின் கண் சிவந்திருந்தது. தாயார் பிள்ளையைப் பெற்றெடுத்து ''என் கோச்செங்கணானே'' என்று மொழிந்து ஆவி நீங்கினர்.

தந்தை சுபதேவர் ''ஆவி அனைய அரும்புதல்வன் தன்னை வளர்த்தங் கணிமகுடம் மேவும் உரிமை முடிகவித்துத் தானும் விரும்பு பெருந்தவத்தின், தாவில் நெறியைச் சென்றடைந்து தலைவர் சிவலோகம் சார்ந்தான்.''

கோச் செங்கட் சோழர் ''ஆனைக்காவில் தாம் முன்னம் அருள் பெற்றதனை அறிந்தங்கு, பானற் களத்துத் தம் பெருமான் அமரும் கோவிற் பணிசமைத்தார்.'' மந்திரிகளை ஏவிப்பல கோயில். தன் முற்பிறப்பில் இருந்த நினைவுடன் யானை புகாவாறு சிறிய வாயிலினைக் கொண்ட பலமாடக் கோயில்கள் எடுப்பித்துள்ளனர். மறையவர்க்கு வேண்டுவன வழங்கினர். முறையுற ஆண்டனர். பன்னாட் சென்றபின் ''மேவினார் திருத்தில்லை வேந்தர் திருவடி நீழற்கீழ்.''

முன்னாளில் திருவானைக்காவில் யானையும் சிலந்தியும் சிவக்கொழுந்தினை வழிபட்டு வந்தன. யானை.பூவும் புனலும்

கொண்டு வழிபட்டது. சிலந்தி வாயினூலாற் பந்தர்செய்து வழிபட்டது. யானை பந்தர் குற்றமுடையதென்று அழித்தது. சிலந்தி யானையின் தூம்புக்கை வழியே புகுந்து கடித்தது. யானை துன்பம் பொறாது தன் கையை ஓங்கித் தரையில் அடித்தது. இரண்டும் உடனே மாண்டன. சிவபெருமான் யானைக்கு வேண்டும் வரங்கொடுத் தருளினன். சிலந்தியைக் கோச் செங்கணானைகப் பிறப்பித் தருளினன்.

87 தலங்கள் - திருவூர்கள்.

88 கானம் - பண்; இசை. ஞானத் தலைவர் - திருஞான சம்பந்தப் பெருமானார். திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் திரு எருக்கத்தம்புலியூரைச் சார்ந்தவர். யாழ்ப்பாணர் மரபைச் சார்ந்தவர். ஆலவாய் அண்ணல் திருவருள் பெற்றவர். திருஞான சம்பந்தப் பெருமானாரைச் சீகாழியில் வந்து கண்டு கும்பிட்டு நண்பராம் பேறுபெற்றனர். உடனிருந்து அவர்தம் திருப்பதிகத்தினை யாழில் மீட்டிப் பாடும் பணிபுரிந்தவர். அவர் தம் திருப்பெருமணத்தில் தம் மனைவியார் மதங்கசூளாமணியாருடன் ஆண்டுத் தோன்றிய பேரொளியுட் கலந்து திருந்து திருவடி நீழலெய்தினர்.

89 சடைய நாயனார் திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூரைச் சார்ந்தவர். "மாதொரு பாகனார்க்கு வழி வழி யடிமைசெய்யும் வேதியர் குலத்துத் தோன்றியவர். நம்பியாரூரரைப் பெறும் நற்றவமுடையவர். சிவனடி இன்பம் எய்தியவர்.

90 இசைஞானியார் "ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்." "ஆண்ட நம்பி தனைப் பயந்த" அருந்தவத்தர். நம்பியாரூரரைப் பெற்ற பெரும் பேற்றால் சிவனடி நிழலெய்தினர்.

91 கனிந்து - மனமுருகி. கமலினி - பரவை நாய்ச்சியார் திருக்கயிலையில் உமையம்மையாருக்குத் திருத்தொண்டு பூண்டிருந்த காலத்துத் திருப்பெயர். இதுபோல் அனிந்திதையாரென்பது சங்கிலிநாய்ச்சியாருக்குள்ள திருப்பெயர்.

92 அலர் கொய் தோகையர் - திருக்கயிலையில் பூக்கொய்த கமலினியார், அனிந்திதையார் ஆகிய இருவர்.

93 சங்கிலி நாய்ச்சியார் திருவொற்றியூர்த் திருக்கோவில் திருப்பூமண்டபத்திலமர்ந்து பூத்தொடுத்துக் கொடுக்கும்திருப்பணியினை மேற்கொண்டிருந்தனர். நம்பியாரூரர்திருவொற்றியூர் வழிபாட்டிற்கு வந்தனர். "முதல்வர்

சாத்துப் பணிகொடுத்து, மின்போல் மறையும் சங்கிலியார் தம்மை விதியால் கண்ணுற்ருர்.'' நம்பியாரூரர் ஆண்டவன் பால் வேண்டிச் சூளுற்றுச் சங்கிலியாரை மணந்துகொண்டனர். மாஞேய் - மயக்கநோய். மால்+நோய் - மாஞேய்.

94 வில்லவன் - சேரர் பெருமான்; விற்கொடியையுடையவன். நம்பியாரூரர் சிவபெருமான் திருவாணைப்படி ''இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகுதேவரெலாம் வந்து வழிபட'' அவர்கள் கொண்டு வந்த வெள்ளை யானைமீது போகும்போது சேரமான் பெருமானைத் தம்மனத்துட் கொண்டு சென்றனர். இதுவே'' சிந்தித்தகன்ருர்'' என்பதன் கருத்தாகும்.

95 நம்பியாரூரர் வெள்ளானையின்மீது செல்லுவதைச் சேரர் பெருமான் கண்டனர். தாம் ஏறிவந்த பரியின் காதில் திருவைந்தெழுத்தினை ஓதினர். அப்பரி வானூறு சென்று நம்பியாரூரர் வெள்ளானையை வலங்கொண்டு முன் சென்றது.

96 நம்பியாரூரர் வெள்ளானையின் மீது தென்பால் நின்று வடபால் நோக்கி வருங்கால் திருமலைச் சாரலில் மாணவர் குழாத்துடன் இருந்த உபமன்னிய முனிவர்க்குப் பேரொளியாகத் தோன்றினர். அவர் எழுந்து வணங்கினர். மாணவர்க்கு ஆரூரர் திருவரலாற்றினை எடுத்து மொழிந்தனர்.

97 பாலாழியுண்ட பழமுனிவர் - மேலோதிய உபமன்னிய முனிவர்.

98 தம்முடைய தோழர்-சிவபெருமான் தோழராகிய நம்பியாரூரர். தம்முடைய தோழர் - நம்பியாரூரர் தம்முடைய தோழராகிய சேரர் பெருமான். சிவபெருமான் இருவரையும் வரவேற்று வாழ்வித்தார்.

99 நம்பியாரூரரும் சேரர் பெருமானும் திருவெள்ளிமலைக்கண் சிவபெருமான் திருமுன் பெரு வணக்கம் புரிந்தனர். சேரர் பெருமான் பாடியருளிய ''திருக்கயிலாய ஞானவுலாச் சிவபெருமான் திருச்செவி ஏற்க அங்கண் அரங்கேற்றப்பட்டது. இதனுல் சிவபெருமானுக்கு உகந்தது தொல் தமிழே என்பது புலனும். வெண்ணெய்க் கண் வன்ருெண்டர் வெள்ளிமலை சேரர் தமிழ், கண்டக்கால் யாண்டுந்தமிழ் காண்.

திருச்சிற்றம்பலம்.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண்: செய்யுள் எண்]

அங்கசன் பூவெல்	47
அங்கருளா லாரூர	93
அண்ணலடி யாரை	60
அத்தனடி யல்லா	77
அந்தகனென் றேசு	43
அரசினையப் பூதி	32
அழுதீ சனைநினைந்	80
அளந்தருள் செம்	8
அறஞ்செயத் தாதை	22
அறன் மண்டு	6
ஆதியிலா ரூரர்க்	16
ஆம்பற்றி னாற்சடை	89
ஆயறிவு தீப	66
ஆரூர ரீசரை	53
ஆலகண்ட ராணை	2
ஆருறு காட்டா	35
ஆற்றரிதா மீச	52
ஆனாயர் வேயிசை	15
ஈசருடை மெய்யடி	85
ஈசனையாள் வாராம்	41
உய்வித் தரனடி	4
உருத்திரமே சொல்லி	19
உருளாய மும்பொன்	44
உற்றவிசை ஞானி	90
எய்தமகிழ்ந் தின்	48
எள்ளாவி ளக்கரன்	59
என்புருவா லம்மை	31
ஏறியவோ டக்கோ	39
ஓராப் பரவைத்	23
கணம்புல்லர் நெய்	63
கணவனெனக் காதலி	40
கருத்தனணி பூவை	71
கருமேனி யன்பாற்	79
கனிந்திதையங்	91
காய்க்கறிவே றென்று	49
கானத் திருநீல	88
சிலம்பியா னூற்கோ	87
சீரூர் கயிலையினுஞ்	94
சுந்தரரைக் கண்ட	92
சேரர்கோ னீதித்	62
சேர்த்தீமுழங் கையெலும்	17
சொல்வைத்த சொல்	99
சோமாசி மாறனார்	45
ஞானசம் பந்த	84
தங்களத்தில் வீழ்ந்த	55
தம்முடைய தோழர்	98
தரைசேர்·சமணீ	24
தலையன்பி னால்	12
தள்ளாது சேரரொடு	95
தானாக வெல்லாதான்	10
திருத்தொண்டர் (பாயிரம்)	
தூண்டா விளக்	க
தூயதிருத் தொண்ட	௨
தென்புகலூ ரீசரை	68
தொண்டர் குறிப்பறிந்	21
தொழச்சங்க ரன்சூ	69
நக்கமணர் வெள்க	34
நடங்கழியா ரன்பருக்	70
நலங்கொடிரு நீல	33
நலச்சிறைநீர் வேணி	29
நாடதனி லேதலங்	61
நாட்டிலடி யாரை	51
நாவலர்கோ மான்	30
நாவலர்வெள் ளானை	96
நிரம்புபொருள்	7
நீற்றறைநஞ் சானை	25
நெறிவார் சடையரை	50

பஞ்சவடிக் சென்று 13
பண்ணார் பசுந்தமிழ் 37
பத்தர்பூ மூழி 9
பரகாயஞ் சேர்ந்தார் 42
பரமனையே பாடுவார் 76
பழுதறுசம் பந்த 65
பாடுமுனைப் பாடி 81
பாரின்மூ வேந்தர் 64
பாலாழி யுண்ட 97
பித்தரென்று வைதாற் 82
புண்ணப்பர் கண்ணி 11
பூவா யிரம்பேர் 1
பொய்ப் பொருண் 5
பொருட்டுறையன் பாட் 46
பொலிகுழவி சோட் 73
போயகமா மாவடு 14
மட்டார்தார் கண்ணி 18
மதுரையிலே ழேழ்புல 54
மருணீக்கி யார்தன் 26
மன்னுதிரு வாரூர் 78
மாமணிப்பொன் மாத 28
மாவணங்கைக் கொண் 74
மீனார்செல் வங்கெடி 57
முத்தமிழ்ஞா னத்தலை 38
முந்திகலாற் செங் 86
மூரிநர சிங்க 56
மூவா யிரமறை 20
மெய்யடியா ராயு 58
மைவைத்த கண்டர் 2
வயற்பகையுள் ளுள்ளு 3
வற்கடம்வந் தூண் 72
வாய்ப்பவர னைத் 75
வால வயதில் 36
வாளா வுங்கோ 83
விண்களிப்பார் காணா 27
வினையடுவார் வந் 67

திருத்தொண்டர் புகழ்மாலை

அப்பர் குலச்சிறை 4
எந்தை கழற் சிங்க 9
எறிபத்த ரேனாதி 2
கணம்புல்லர் காரி 8
சாக்கியர்சி றப்புலி 7
சீரார்நற் சைவத் (க. வா)
இல்லைமறை யோர்க 1
நார்பத்த ராய்ப் 10
பூசலார் பூவை 11
பொய்யடிமை யில்லாப் 5
மூர்த்திமுரு கர்ருத்ர 3
வம்பமணர் வல்வழக் 6